மக்களின் பத்து

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்


# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா
5-00

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 15 ஞாயிற்றுக்கிழமை (01-10-2000) தொ. பேசி;- 3378 ஒலி: 286


## ஓயாத அலைகள்-4 நடவடிக்கையைத் தொடர்ந்து

★ மக்கள் இடம்பெயர்கின்றனர் ★ கடைகள் பூட்டு

★ இராணுவம் குவிப்பு ★ அகோர எறிகணைவீச்சு

# யுத்தகளமாக மாறிய தென்மராட்சி

# புலிகள் எந்நேரமும் ஊடுருவலாம்!

## இராணுவம் உஷார் நிலையில்

[தென்மராட்சியில் இருந்து நமது நிருபர்]

யுத்தப்பிரதேசமாகக் காட்சியளிக்கும் தென்மராட்சிப் பகுதியில் இருந்து சுமார் ஆயிரம் பொதுமக்கள்நேற்று தமது சொந்த இடங்களைவிட்டு மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேறி வடமராட்சிப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

நேற்று ஓயாத அலைகள்-4 நடவடிக்கைசற்று ஓய்ந்திருந்ததை அடுத்து பொதுமக்கள் மெல்ல மெல்ல வெளியேறத் தொடங்கினர் இவர்களின்வெளியேற்றத்தின் போது யூ'என்.எச்'சி-ஆர் அதிகாரிகளும் உடனிருந்தார்கள்.

தமிழீழ விடுதலைப்'புலிகளின் அறிவிப்பை அடுத்து தென்மராட்சி மக்கள் நேற்றுக் காலை 10 மணி முதல் இடம்பெயர்ந்து வடமராட்சிப்பகுதியை நோக்கி நகரத் தொடங்கியுள்ளனர்.

கொடிகாமம், கச்சாய், மிருசுவில், மந்துவில் பகுதி மக்களே இவ்வாறு இடம் பெயர்ந்து செல்லத்தொடங்கியுள்ளனர். இடம்பெயர்ந்த மக்களை முள்ளிச் சந்தியில் வைத்து சோதனை நடத்திய பின் அவ்வப்பகுதி கிராம சேவையாளர்களும் இராணுவத்திலும் பதிந்த பின்னரே வெளியேற அனுமதிக்கப்பட்டனர்.

இடம்பெயரும் மக்கள் கால்

(10ஆம்பக்கம் பார்க்க)

## டோறாப்படகு மீதுபுலிகள் தாக்குதல்

## இரு கடற்படையினர் பலி!

(கொழும்பு)

புத்தளம் சுற்பிட்டிக் கடற்பிராந்தியத்தில் கடற்படைக்குச் சொந்தமான ஸ்ரேலியத் தயாரிப்பான அதிவேக டோறா படகு மீது விடுத

காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சுற்பிட்டிக் கடலில் குதிரை

கள் மோட்டார் மற்றும்ஆர்.பி.ஜி. தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலை அடுத்து கடற்படையினரின் படகு தீப்பற்றி எரிந்ததாக

## குண்டுத்தாக்குதலில் அமைச்சர் ஹிஸ்புல்லா மயிரிழையில் தப்பினார்!

தபால் தொலைத் தொடர்புகள் பிரதியமைச்சரும் தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்றில் காயமெதுவுமின்றி மயிரிழையில் உயிர் தப்பினார். இவரது மெய்ப்பாதுகாவலரான ஐந்து பொலிசாரும் ஒரு சிவிலியனும் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பு நிலையங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படும்

### யாழ். படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் யாழ்ப்பாண மக்கள் அச்சமின்றி வாக்களிப்பதற்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படுமென யாழ். மாவட்ட இராணுவத் தளபதி அன்ரன் பொன்சேகரா தெரிவித்துள்ளார்.

10 ஆம் பக்கம் பார்க்க

## சிறுப்பிட்டி ஷெல் வீச்சில் இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டிப் பகுதியில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் இளைஞர் ஒருவர் வயிறுப்

வீதியைச் சேர்ந்த சின்னத்துரை சுதாகரன் (வயது 25) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவ

பிராந்தியத்தில் கடற்படைக்குச் சொந்தமான ஸ்ரேலியத் தயாரிப்பான அதி வேக டோரா படகு மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு கடற்படையினர் கொல்லப்பட்டும் ஐவர்

நேற்று நண்பகல் 12 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

கற்பிட்டிக் கடலில் குதிரைமலைக்கு அப்பால் ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் மீதே விடுதலைப்புலி

கொண்டனர்.

இத்தாக்குதலை அடுத்து கடற் படையினரின் படகு தீப்பற்றி எரிந்ததாகவும் அதில் இருந்த 2 மாலுமிகளைக் காணவில்லை என்

(10 பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டிப் பகுதியில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் இளைஞர் ஒருவர் வயிறுப் பகுதியில் பலத்த காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சின்னத்துரை சுதாகரன் (வயது 25) என்பவரே வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

சிறுப்பிட்டி தோட்ட வெளியில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுதே ஷெல் வீழ்ந்து வெடித்ததாக

(10ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை சிங்களவருக்கு மட்டுமே உரியது

# தமிழர்கள் இந்தியாவுடனேயே யுத்தம் செய்ய வேண்டும்

### பௌத்தபிக்கு பிரச்சாரம்

(கொழும்பு)

தமிழர்கள் தமக்கு நாடு தேவைப்பட்டால் தமிழ்நாட்டுடன் யுத்தம் செய்து ஒருபகுதியை பிடித்து அங்கு வாழலாம், இலங்கை சிங்களவருக்கு மட்டுமே உரியது;

இவ்வாறு சிஹல உறுமய கட்சியின்தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பௌத்தபிக்கு ஒருவர் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு கிறீன்பாத் மைதானத்தில் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பௌத்த பிக்குவான அத்துர

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை அதிபர் கத்தியால் குத்திக் கொலை

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் சூரியவேவ அமைப்பாளர் ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறு கொல்லப்பட்டவர் சூரியவேவவிலுள்ள மகிந்த வித்தியாலய அதிபர் ஆரியதாஸ எனவும் இவர் அமைச்சர் மகிந்தராஜபக்ஸவின் தீவிர ஆதரவாளர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது இனந்தெரியாதோர் இவரைக்கத்தியால் குத்திக் கொன்றுள்ளனர்.

(ந)

## வாவியில் குளித்துக் கொண்டிருந்த சிறுவன் சுட்டுக்கொலை

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு வாவி ஒன்றில் குளித்துக்கொண்டிருந்த குலசிங்கம் குகதர்சன் என்ற பன்னிரண்டு வயதுச் சிறுவன் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வாவியின் எதிர்ப்பக்கக் கரைப்பகுதியிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டினாலேயே சிறுவன் கொல்லப்பட்டதாகவும் இப்பகுதியில் பொலிஸாரே நடமாடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ந - 12)

# வல்லைப் பாலத்தில் மண்ணரிப்பு போக்குவரத்து ஸ்தம்பிக்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

திருத்தப்படாத நிலையில் உள்ள வல்லைப்பாலம் தற்பொழுது பெய்துவரும் பெருமழைகாரணமாக பாலத்தை அண்டிய பகுதிகளில் உள்ள மண் அடித்துச் செல்லப்பட்டு பகலில் வாகனப்போக்குவரத்துக்கு பெரும் அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இராணுவத் தளபாடங்களை ஏற்றிக் கொண்டுசென்ற ட்ரக் வண்டியொன்று தடம்புரண்ட போது பாலத்தின் மேற்குப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நல்லூர் பிரதேச சபை

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி.)

பொறுப்பேற்ற பின்

# மிலேனியம் வரை நடைபெற்ற செயற்றிட்டங்களின்விபரம் 2000



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் கடந்த உள்ளூராட்சித்தேர்தலின் போது மக்களால் தெரிவு செய்யப்பட்டு, உள்ளூராட்சி சபைகளைப் பொறுப்பேற்று அதனூடாக மக்களின் தேவைகளை இனங்கண்டு அதனடிப்படையில் சேவைகளைச்செய்து வருகின்றோம். எமது கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமாகிய கௌரவ கே. என் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நேரடி வழிகாட்டல் மூலமும் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய திரு வி.கே. ஜெகன் அவர்களின் இடை விடா முயற்சியாலும் எமது சபையின் உபதலைவர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அரசாங்க அதிபர், உள்ளூராட்சி ஆணையாளர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித்திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பிரதேசசெயலர் நல்லூர் ஆகியோரது ஒத்துழைப்போடும் எமது பிரதேச மக்களின் இதய பூர்வமான ஆதரவோடும் நாம் இதுவரை எமது சபை மூலம் மேற்கொண்ட அபிவிருத்தி, புனரமைப்பு செயற்றிட்டங்களை இப்பத்திரிகை வாயிலாக சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இம் மக்கள் சேவையில் எமது முன்னாள் உபதலைவர் திரு. தி. ராஜ்குமார்[தோழர் ரகு] உறுப்பினர் பியசேன கருணாரத்தின (தோழர் ரஞ்சன்) ஆகியோர் தம்முயிரை தியாகம் செய்தனர். அவர்களின் மக்கள் சேவை என்றும் எம் மக்களின் மனதை விட்டகலா. ''தேசத்திற்காக தியாகங்களை ஏற்போம், என்றும் நாம் மக்களின் சேவகர்கள்''

என்றும் மக்கள் சேவைக்குரிய,

திரு துரை தவராஜா, ஜே. பி.
உபதலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

திரு- கனகரத்தினம் மணிபல்லவராஜன், ஜே. பி. யு. எம்.
தலைவர்,
நல்லூர்பிரதேச சபை.

## நல்லூர் பிரதேச சபை.

### 1998 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டமொத்த வேலைத் திட்ட விபரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | சபை நிதி | 2,280,000 00 |
| 2. | பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை | 378,000 00 |
| 3. | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி | 170,000 00 |
| 4. | தான் நிதி | 1,000,000 00 |
| 5. | விசேட மூலதன நிதி | 1,500,000 00 |

### 1999 ஆம் ஆண்டு செய்யப்பட்ட வேலை விபரங்கள்

சபை நிதி

| | | |
|---|---|---|
| 1. | சைவப்பாடசாலை வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை திருநெல்வேலி | 135,000 00 |
| 2. | முருகன் வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை, திருநெல்வேலி | 150,000 00 |
| 3. | கேணியடி வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை, கொக்குவில் | 175,000 00 |
| 4. | கொக்குவில் சுடலை வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை கொக்குவில் | 175,000 00 |
| 5. | கோணாவளை தொடர் வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை, கொக்குவில் | 30,000 00 |
| 6. | பூதவராயர் வீதி அணைச்சுவர்திருத்தம், திருநெல்வேலி கிழக்கு | 50,000 00 |
| 7. | கோண்டாவில் நூல்நிலையமும் வாகீஸ்வரி சனசமூக நிலையமும் திருத்தம், கோண்டாவில் | 250,000 00 |
| 8. | திருநெல்வேலிச் சந்தைக் கொட்டகைஅமைத்தல் திருநெல்வேலி | 250,000 00 |
| 9. | கொக்குவில் உபஅலுவலக நூல்நிலைய திருத்தமும் [illegible] | [illegible] |

| | | |
|---|---|---|
| | திருநெல்வேலி | 750,000 00 |
| 2) | நந்தாவில் கிணறு திருத்தம், கோண்டாவில் | 25,000 00 |
| 3) | சுட்டையால் மயானக் கிணறு திருத்தம், கோண்டாவில் | 35,000 00 |
| 4) | கொக்குவில் உப அலுவலகக் கிணறு திருத்தம் | 30,000 00 |
| 5) | சித்துபாத்தி மயானக்கிணறு திருத்தம், அரியாலை | 30,000 00 |
| 6) | கொக்குவில் இந்துமயானக் கிணறு திருத்தம், கொக்குவில் | 20,000 00 |
| 7) | திருநெல்வேலி இந்துமயானக் கிணறு, திருநெல்வேலி | 20,000 00 |
| 8) | காரைக்கால் இந்துமயானக் குழாய்க்கிணறு அமைத்தல், கோண்டாவில் மேற்கு | 25,000 00 |

வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலம் செய்யப்பட்ட வேலைகள்

| | | |
|---|---|---|
| 1) | ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி | 1,000 000 00 |
| 2) | மானிப்பாய் இணுவில் அன்னுங்கை வீதி | 775,000 00 |
| 3) | பிள்ளையார் வீதி, திருநெல்வேலி. | 172,900 00 |
| 4) | ஆடியபாதம் கொக்குவல் வீதி, கொக்குவில் | 667,840 00 |
| 5) | அரசடிப் பிள்ளையார் வீதி, கோண்டாவில் | 320,050 00 |
| 6) | கலாசாலை வீதி, திருநெல்வேலி | 243,550 00 |
| 7) | இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி. | 80,080 00 |
| 8) | சம்பியன் வீதி, கொக்குவில் | 755,000 00 |
| 9) | நந்தாவில் வீதி, கொக்குவில் | 436,000 00 |

விசேட மூலதன நிதி 1.5 மில்லியன்

| | | |
|---|---|---|
| 1) | தென்னங்கன்று விநியோகம் | 140,000 00 |
| 2) | மரமுந்திரிகைக் கன்று விநியோகம் | 100,000 00 |

| | | |
|---|---|---|
| | நிலையமும் திருத்தம், கோண்டாவில | 250,000 00 |
| 8. | திருநெல்வேலிச் சந்தைக் கொட்டகைஅமைத்தல் திருநெல்வேலி | 250,000 00 |
| 9. | கொக்குவில் உபஅலுவலக நூல்நிலைய திருத்தமும் திந்தை பூசுதலும் | 240,000 00 |
| 10. | ஆலடி வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை, கோண்டாவில் | 100,000 00 |
| 11) | கொக்குவில் சுடலை தொடர் வீதி திருத்தம் கொக்குவில் | 165,000 00 |
| 12) | அடைக்கலநாயகி வீதி திருத்தம், கொக்கு வில் மேற்கு, ஆனைக்கோட்டை | 130,000 00 |
| 13) | அம்மன் வீதி திருத்தம், கோண்டாவில்கிழக்கு | 125,000 00 |
| 14) | தாய் சேய் பராமரிப்பு நிலையங்களுக்கான போசாக்குணவு. திருநெல்வேலி, கொக்கு வில், கோண்டாவில்) | 100,000 00 |
| 15) | நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 5-ம்ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாண வர்களுக்கான நன்கொடை | 39,000 00 |

### பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை

| | | |
|---|---|---|
| 1) | மழை நீர் வடிகாலமைத்தல் வேலை (ஆனைக் கோட்டை) | 200,000 00 |
| 2) | வண்ணார்பண்ணை வடமேற்குப் பாடசாலை வீதி திருத்தம் | 100,000 00 |
| 3) | வராகியம்மன் வீதி திருத்தம், கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை | 100,000 00 |

### பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி

| | | |
|---|---|---|
| 1) | செம்பாடு குழாய்க்கிணறு அமைத்தல், கோண்டாவில் கிழக்கு | 25,000 00 |
| 2) | சிவகாமியம்மன் வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை, கோண்டாவல் மேற்கு | 100,000 00 |

### புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை, வடக்கு-கிழக்கு (றான்) நிதி

1) சுகாதாரத் தொழிலாளர் விடுதி அமைத்தல்,

### விசேட மூலதன நிதி 1.5 மில்லியன்

| | | |
|---|---|---|
| 1) | தென்னங்கன்று விநியோகம் | 140,000 00 |
| 2) | மரமுந்திரிகைக் கன்று விநியோகம் | 100,000 00 |
| 3) | ஞான வைரவர் ச. ச. நிலையம் திருத்தம் திருநெல்வேலி கிழக்கு | 25,000 00 |
| 4) | காரைக்கால் இந்துமயான மடம் திருத்தம் கோண்டாவில் மேற்கு | 50,000 00 |
| 5) | கலைவாணி ச. ச. நிலையம் திருத்தம்-பூநாறி மரவீதி, கொக்குவல் மேற்கு | 20,000 00 |
| 6) | பாரதி ச. ச. நிலையம் திருத்தம்-திருநெல் வேலி | 20,000 00 |
| 7) | இந்து இளைஞர் மன்றமும் ச. ச. நிலையம் திருத்தம்-கோண்டாவில் கிழக்கு | 25,000 00 |
| 8) | காந்திஜி ச. ச. நிலையம் திருத்தம்-கொக்கு வில் மேற்கு | 20,000 00 |
| 9) | கட்டையால் மயான புனரமைப்பு-கோண் டாவல் | 100,000 00 |
| 10) | கொட்டைக்காடு மயான புனரமைப்பு கோண் டாவில் | 50,000 00 |
| 11) | கொக்குவில் இந்து மயான புனரமைப்பு கொக்குவில் | 100,000 00 |
| 12) | ஞானவீர சனசமூக நிலைய புனரமைப்பு கோண்டாவில் | 50,000 00 |
| 13) | கலாமன்ற சனசமூக நிலைய புனரமைப்பு திருநெல்வேலி | 50,000 00 |
| 14) | விவேகானந்தா சனசமூக நிலைய புனரமைப்பு- கோண்டாவில் | ரூ 20,000 00 |
| 15) | வாலையம்மன் சனசமூக நிலைய தளபாடம்- திருநெல்வேலி கிழக்கு | 25,000 00 |
| 16) | நல்லூர் வடக்கு சனசமூக நிலைய தளபாடம்- நல்லூர் வடக்கு | 75,000 00 |
| 17) | கொக்குவில் சனசமூக நிலைய புனரமைப்பு- பிரம்படி கொக்குவல் கிழக்கு | 150,000 00 |
| 18) | நேதாஜி சனசமூக நிலைய தளபாடம்- கொக்குவில் கிழக்கு | 20,000 00 |

(3 ஆம்பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்



## மிலேனியம்....

| | | |
|---|---|---|
| 19) | உதய சூரியன் சனசமூக நிலைய தளபாடம்-கோண்டாவில் மேற்கு | 50,000 00 |
| 20) | இந்து வாலிபர் சங்கக் கட்டடத் திருத்தம்-திருநெல்வேலி | 145,000 00 |
| 21) | ஞான ஒளி சனசமூக நிலைய கட்டடம் அமைத்தல்-கோண்டாவில் | 25,000 00 |
| 22) | அலுவலகத்திற்கு தளபாட உபகரணக் கொள்வனவு-நல்லூர் பிரதேச சபை | 200,000 00 |
| 13) | கலைமகள் சனசமூக நிலைய திருத்தம்-கேணியடி. கொககுவில மேற்கு | 20,000 00 |
| 24) | இலங்கை நாயகி சனசமூக நிலைய திருத்தம்-நல்லூர் வடக்கு | 20,000 00 |

### விசேட மூலதன நிதி 1.1 மில்லியன்

| | | |
|---|---|---|
| 1) | ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய திருத்தம்-கோண்டாவில் கிழக்கு | 100,000 00 |
| 2) | அமரகவி சனசமூக நிலைய வாசிப்பு மண்டபம்-கோண்டாவில் மேற்கு | 50,000 00 |
| 3) | மத்திய சனசமூக நிலைய திருத்தம்-கோண்டாவில் வடக்கு | 50,000 00 |
| 4) | பகுத்தறிவக சனசமூக திருத்தம்-திருநெல்வேலி | 50,000 00 |
| 5) | கொக்குவில் சனசமூக நிலைய புனரமைப்பு 2ம் கட்டம்-பிரம்படி கொக்குவில் | 100,000 00 |
| 6) | சனசமூக நிலையங்களுக்கான தளபாடம் வழங்கல் | 100,000 00 |
| 7) | சனசமூக நிலையங்களுக்கான பத்திரிகை விநியோகம் | 200,000 00 |
| 8) | சனசமூக நிலையங்களுக்கான புத்தகம் வழங்கல் | 200,000 00 |
| 9) | பொது நூலகங்களுக்கு தொலைக்காட்சிப்பெட்டி வழங்கல் | 200,000 00 |
| 10) | சனசமூக நிலையங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் | 50 000 00 |

## 2000-ம் ஆண்டு நடைபெற்ற நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைத்திட்டங்கள்

### சபைநிதி

| | | |
|---|---|---|
| 1) | பழம் கிணற்றுப் பிள்ளையார் வீதி, கல்லிட்டுத் தாரிடல் திருநெல்வேலி | 250,000 00 |
| 2) | ஸ்ரீ நாராயணா வீதி, கல்லிட்டுத் தாரிடல் கோண்டாவில் | 225,000 00 |
| 3) | மிசன் (விவேகானந்தா ச.ச.நி) வீதி, கல்லிட்டுத் தாரிடல் கோண்டாவில் | 200,000 00 |
| 4) | சுகாதாரத் தொழிலாளர் விடுதி அமைத்தல் வேலை திருநெல்வேலி | 750,000 00 |
| 5) | நவீன சந்தைத் திருத்தம் திருநெல்வேலி | 1,500,000 00 |
| 6) | திருநெல்வேலிச் சந்தை மீன் மேசையும் இருக்கையும் அமைத்தல் | 19,000 00 |
| 7) | கொக்குவில் சந்தை மீன் மேசையும் இருக்கையும் அமைத்தல் | 42,000 00 |
| 8) | கொக்குவில் இந்து மயானத் திருத்தம்-கொக்குவில் கிழக்கு | 68,118 75 |
| 9) | கொக்குவில் உபஅலுவலக திருத்தமும் பராமரிப்பும் | 230,000 00 |
| 10) | காளிகோவில் வீதி, கல்லிட்டுத் தாரிடல் கொக்குவில் கிழக்கு | 350,000 00 |
| 11) | கொக்குவில் உப அலுவலக தட்டை சிலிங் வேலை | 20,000 00 |
| 12) | தாய் சேய் பராமரிப்பு நிலையங்களுக்கான | |

### புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை, வடக்கு-கிழக்கு (றான்) நிதி

| | | |
|---|---|---|
| 1) | கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் கோவில் புனரமைப்பு | 1,000,000 00 |

### புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை, வடக்கு-கிழக்கு (றான்) நிதி

| | | |
|---|---|---|
| 1) | உடையார் வீதி-கொக்குவில் கிழக்கு | 400,000 00 |
| 2) | பிடாரி கோவில் மேற்கு வீதி-கொக்குவில் மேற்கு | 250.000 00 |
| 3) | ஐயனார் வீதி-கொக்குவில் மேற்கு | 285,000 00 |
| 4) | பொற்பதி 1ம் ஒழுங்கை-கொக்குவில கிழக்கு | 250.000 00 |
| 5) | செம்பாடு வீதி-கொக்குவில் கிழக்கு | 170,000 00 |
| 6) | பொன்னையா வீதி-கொக்குவில் மேற்கு | 345,000 00 |
| 7) | கலைமகள் வீதி-நல்லூர் வடக்கு | 300,000 00 |
| 8) | வீரபத்திரர் வீதி-கோண்டாவில் வடக்கு | 200,000 00 |
| 9) | நாராயணா குறுக்கு வீதி-கோண்டாவில் கிழக்கு | 105,000 00 |
| 10) | குமரகோட்டம் வீதி-கோண்டாவில் கிழக்கு | 145,000 00 |
| 11) | கொக்குவில் சனசமூக நிலையம் 3ம் கட்ட வேலை பிரம்படி கொக்குவில் | 150,000 00 |
| 12) | ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் கோண்டாவில் கிழக்கு | 100,000 00 |
| 13) | ஞானவீர சனசமூக நிலையம்-கோண்டாவில் | 100,000 00 |
| 14) | மகமாஜி சனசமூக நிலையம்-கொக்குவில் கிழக்கு | 50,000 00 |
| 15) | வேதபாராயணா சனசமூக நிலையம்-கோண்டாவில் மேற்கு | 100.000 00 |
| 16) | பாரதி சனசமூக நிலையம் திருநெல்வேலி | 50,000 00 |
| 17) | திருநெல்வேலி புனரமைப்பு சந்தை | 5,000,000 00 |

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை மூலம் செய்யப்பட்ட வேலைகள்

| | | |
|---|---|---|
| 1) | மானிப்பாய் இணுவில் அன்னங்கை ஒழுங்கை | 800,000 00 |
| 2) | இராமநாதன் வீதி-திருநெல்வேலி | 700,000 00 |
| 3) | பிறவுண் வீதி-கொக்குவில் | 1,000,000 00 |
| 4) | பிரம்படி வீதி-கொக்குவில் | 700,000 00 |
| 5) | மணியகாரர் வீதி-கொக்குவில் வீதி | 500,000 00 |
| 6) | குமரகோட்டம் வீதி-கோண்டாவில் | 885,000 00 |
| 7) | அம்மன் வீதி-திருநெல்வேலி | 450,000 00 |
| 8) | சிவன் வீதி-திருநெல்வேலி | 633,000 00 |
| 9) | சட்டநாதர் வீதி-நல்லூர் வடக்கு | 715,000 00 |

### மேலும் எம்மால் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகள்

| | | |
|---|---|---|
| 1) | உயரப்புலம் வீதி-பொன்னையா வீதி வரை கல்லிட்டுத் தாரிடல் வேலை கொக்குவில் மேற்கு | 325,000 00 |
| 2) | முத்தட்டுமட வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை கோண்டாவில் மேற்கு | 225,000 00 |
| 3) | சைவப்பாடசாலை வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை-கோண்டாவில் மேற்கு | 225,000 00 |
| 4) | கலட்டி வீதி மதகு கல்லிட்டுத் தாரிடல் வேலை-கோண்டாவில் மேற்கு | 340,000 00 |
| 5) | செபஸ்தியார் வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை கோண்டாவில் கிழக்கு | 400,000 00 |
| 6) | வைரவர் கோவில் வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை-கோண்டாவில் கிழக்கு | 435,000 00 |
| 7) | தில்லையம்பதி வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை-கோண்டாவில் வடக்கு | 90,000 00 |
| 8) | ஆலடி வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை-கோண்டாவில் கிழக்கு | 215,000 00 |
| 9) | செங்குந்தா வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை திருநெல்வேலி கிழக்கு | 350,000 00 |
| 10) | புதிய செங்குந்தா வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை- திருநெல்வேலி கிழக்கு | 210,000 00 |
| 11) | சேச் வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை | |

10) காளிகோவில் வீதி, கல்லிட்டுத் தாரிடல் கொக்குவில் கிழக்கு 350,000 00

11) கொக்குவில் உப அலுவலக தட்டை சீலிங் வேலை 20,000 00

12) தாய் சேய் பராமரிப்பு நிலையங்களுக்கான போஷாக்குணவு வழங்கல் 125,000 00

13) 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யெய்திய, பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நன்கொடை 75,000 00

14) எமது சபைக்கு கோணாவளை வீதியிலுள்ள மேல்மாடியுடன் கூடிய வீடு கொள்வனவு 2,000,000 00

15) மனோன்மணி சனசமூக நிலையம் புனரமைப்பு கொக்குவில் கிழக்கு 200,000 00

16) பொது நூலகம் அமைத்தல் கோண்டாவில் 1,500,000 00

## பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை
## ரூ 1,000,000 00

1) இராமகிருஷ்ண மிசன் வீதி கல்லிட்டுத்தாரிடல் வேலை-கோண்டாவில் 250,000 00

2) மாரியம்மன் வீதி, கல்லிட்டுத்தாரிடல் வேலை-திருநெல்வேலி 250,000 00

3) கோப்பாய்-இருபாலை வீதி, கல்லிட்டுத்தாரிடல் வேலை-கோண்டாவில் 100,000 00

4) அமரகவி சனசமூக நிலைய வகுப்பறை அமைத்தல்-கோண்டாவில் மேற்கு 250,000 00

5) அமரகவி சனசமூக நிலைய குழாய்க்கிணறு அமைத்தல்-கோண்டாவில் மேற்கு 25,000 00

6) நூலகங்களுக்கு புத்தகம் வழங்கல்-திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் 100,000 00

7) மலகூடங்கள் அமைத்தல்-கலைவாணி சனசமூக நிலையம் கொக்குவில் மேற்கு 25,000 00

திருநெல்வேலி கிழக்கு 350,000 00

10) புதிய செங்குந்தா வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை- திருநெல்வேலி கிழக்கு 210,000 00

11) சேச் வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை திருநெல்வேலி கிழக்கு 225,000 00

12) பூநாறி மர வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை கொக்குவில் மேற்கு 455,000 00

13) பூநாறி மர வாய்க்கால்-கொக்குவில் மேற்கு 120,000 00

14) ஞானபாஸ்கரோதயா வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை 200,000 00

15) அச்சுக்கூட வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை கொக்குவில் கிழக்கு 215,000 00

## மேலும் சில வேலைத் திட்டங்கள்

1) பின்தங்கிய பகுதிகளுக்கான வீதி அபிவிருத்தி திட்டம் [கொக்குவில், திருநெல்வேலி, கோண்டாவில்] 3,000,000 00

2) பின்தங்கிய கிராமங்களுக்கான மின் விநியோகம் (கொக்குவில், திருநெல்வேலி, கோண்டாவில்) 600,000 00

3) இடப்பெயர்ந்து எமது பிரதேச எல்லைக்குள் வசிக்கும் மக்களுக்கான உடுபுடவை, பாவனைப் பொருட்கள், போசாக்குணவு, மருந்து வகை விநியோகம் 300,000 00

1) கொக்குவிலில் ஆயுர்வேத வைத்தியசாலை திறந்துவைக்கப் பட்டது.

2) கோண்டாவிலில் ஆயுர்வேத வைத்தியசாலை திறந்துவைக்கப் பட்டது.

3) சிறுவர் நிறைவாழ்வு இல்லத்திற்கு இலவச மரக்கறி, தலையணை பெட்சீட் விநியோகம், திருநெல்வேலி.

4) இடம்பெயர்ந்த மக்களின் சுகாதார, அடிப்படை வசதி செய்து கொடுத்தல் [கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி]

5) பிரதேச எல்லைகளில் வீதி வளைவு அமைத்தல்-4

6) வீதியோர நடைபாதையமைத்தல், - திருநெல்வேலி.

7) கலைஞானி அவர்களால் சேகரிக்கப்பட்டுள்ள தொல் பொருட் களை பாதுகாத்தல்.

(கி-837)

# செய்தித் துளிகள்

## கொடிவாரம் அனுஷ்டிப்பு

(கிளிநொச்சி)

வன்னி பெருநிலப்பரப்பில் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, சிறுவர் நலன் காக்கும் கடந்த வியாழன் தொடக்கம் கொடிவாரம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

இக்கொடிவாரம் இன்று 1ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும்.

உறவுகளை இழந்து உரிமைகளை இழந்து வாழும் சிறுவர்களை அரவணைக்கும் நோக்குடன் இக் கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவேண்டியது எனக் கூறப்படுகிறது. (த)

## உடுவிலில் பால்மா விநியோகம்

[அரியாலை]

தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குள் வசிக்கும் இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குப் பால்மா வழங்கப்பட்டுள்ளது.

சர்வோதய அமைப்பினால் உடுவில் பிரதேச செயலகத்தில் வைத்து இப்பால்மாக்கள் வழங்கப்பட்டது.

(த-106)

## அடுத்த வருட பாட நூல்கள் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

அடுத்த வருடத்திற்கான இலவசப் பாட நூல்களை, மாவட்ட ரீதியாக அனுப்பி வைப்பதில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதற்மைய மட்டக்களப்பு மாவட்டத்திற்கான இலவசப் பாட நூல்கள் இவ்வாரம் அனுப்பிவைக்கப்படலாம் என நம்பப்படுகிறது.

மூன்றாம் தவணை விடுமுறைக்கு முன்பதாக பாடப் புத்தகங்கள் வழங்குவதனைக் கருத்திற் கொண்டே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

(உ)

## நிர்வாகசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் நலன்புரிச்சங்க நிர்வாக சபைக் கூட்டம் இன்று 1ஆம் திகதி ஞாயிறு காலை

## விசேட விற்பனை நிலையம்

[வரணி]

தென்மராட்சியில இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சிப் பகுதிகளில் தங்கியிருக்கும் மக்களின் நலன் கருதி தெ.கி.ப.நோ.கூ. சங்கக்கிளைகளின் விசேட விற்பனை நிலையம் கொடிகாமம் வீதி நெல்லியடியிலும் மாலுச்சந்தி வீதிவதிரியிலும் அமைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி மக்களின் நிவாரணம் மற்றும் பாவனைப் பொருட்களை இக் கிளைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-28)

## வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக திருத்தப்படாமல் இருந்த நல்லூர், செட்டித்தெரு வீதியின் திருத்த வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(த)

## வாகன விபத்தில் இருவர் பலி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு செங்கலடி பதுளைவீதிகொடுவாமடுவில் நேற்றுமுன்தினம்இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இரு பயணிகள் பலியாகியுள்ள இவ்விபத்தில் 28 பயணிகள் காயமடைந்தனர்.

அளவுக்கு அதிகமான பயணிகள் பயணம் செய்தமையினால் இவ்விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

[ந]

## ஐரோப்பிய குழு சந்திப்பு

(கொழும்பு)

எதிர் வரும் பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இலங்கை வந்துள்ள ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக் குழு நேற்றுமுன்தினம் தேர்தல்ஆணையாளரைச் சந்தித்துள்ளனர்.

இச் சந்திப்பின் போது வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாத வகையில் நியாயமான, சுதந்திரமான தேர்தலை நடத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

(ந5-)

## தேர்தல் வன்முறை 742ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலை

# யாழ். இளைஞர் இருவர் பிணையில் செல்ல அனுமதி

## பலர் தொடர்ந்தும் காவலில்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்ட இருவர் கடந்த வியாழன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ் நீதிமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது மேற்படி இருவருக்கும் பிணை அனுமதி வழங்கப்பட்டது.

அப்புத்துரை ஆனந்தகுமார் (சிறுப்பிட்டி தெற்குநீர்வேலி) பரணவாஸ் போல்ட்டர் (நெடுந்தீவு) ஆகியோரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இதேவேளை செல்வராசா மணிவண்ணன், கார்த்திகேசு குலேந்திரன், நவரட்ணம் ஆனந்தராசா, சூசைப்பிள்ளை பாலேஸ்வரன், தங்கராசா ரதீபன், ராசையா தங்கராசா, இரத்தினசிங்கம்ரமேஸ், அந்தோனிப்பிள்ளை ஸ்ரனிஸ்லொஸ் ஆகியோரைதொடர்ந்தும் அடுத்த மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(க-12)

# இராசி பலன்

01/ 10 / 2000
(புரட்டாதி 15, ஞாயிறு)
சதுர்த்தி
பி.இ.12.26வரை
விசாகம்
பி.இ 1.48வரை
இராகுகாலம்
4.32-6.02
சுபநேரம்
9.02-10.32
சதுர்த்திவிரதம்

**மேடம்**
சுவாரஸ்யம், நினைத்தகாரியம் கைகூடும், தனவரவு.

**இடபம்**
தொழில் முயற்சிவிருத்தி. சந்தோசமான நிலை, முயற்சி பலிதம்.

**மிதுனம்**
மனஸ்தாபம், சொத்துக்களால் யோசனை, காரிய ஜெயம்.

**கடகம்**
காரிய நன்மை, தாய்வழி உறவு, வாகனசுகம்.

**சிங்கம்**
இளைய சகோதரர்உதவி, பிரயாணம், தனவரவு.

**கன்னி**
விதண்டாவாதம், காரியத்தடை, தனவிரயம்.

**துலாம்**
உடல் நலம், தெய்வசிந்தனை, காரியம் கைகூடும்.

**விருச்சிகம்**
பிரயாணம், நித்திரைக் குறை, காரிய நன்மை,

**தனுசு**
கீர்த்தி, தனவரவு. குடும்ப

## 15 வது நிறைவு விழா

(தென்மராட்சி)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 15 வது ஆண்டு நிறைவு விழாவும் 13 வது சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் கழகத் தலைவர் சி. குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வணிக பீட பீடாதிபதி மா. நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராகப் பங்கு கொள்ளவுள்ளார். (க-77)

# யாழ். பிரதம தபாலகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபாலகத்தில் பாதுகாப்புஏற்பாடுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தபாலகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தபால்மூலம் வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும்பணி தற்போது நடைபெற்று வருவதாலேயே பாதுகாப்புஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# திருநெல்வேலி ம.வி.க. கிண்ணத்துக்கான கிரிக்கெட் இறுதிச் சுற்றுப்போட்டி

(திருநெல்வேலி)

திருநெல்வேலி மத்திய விளையாட்டுக் கழகக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப.3.00 மணிக்கு முத்துத்தம்பி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி மத்திய விளையாட்டுக் கழகம்,36 விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் 7 பேர் கொண்ட 15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட சுற்றுப் போட்டியை நடத்தியது.

இதில் வெற்றியீட்டிய நொதேன் விளையாட்டுக் கழகத்திற்கு எதிராக கொக்குவில் மத்திய விளையாட்டுக் கழகம் ஆடவுள்ளது.

நொதேன் விளையாட்டுக் கழக அணிக்கு ப.பாலமுரளியும், கொக்குவில் மத்திய விளையாட்டுக்கழக அணிக்கு பா.சசிக்குமரனும் தலைமை தாங்குகிறார்கள்.

(செ-22)

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்
பொது மக்கள் கவனத்திற்கு
இன்று தொடக்கம் 450 கிராம்
பாணின் உச்ச விலை 10 ரூபா

பாணின் விலை, நிறை. தரம் ஆகியவற்றில் குறைபாடுகள் இருப்பின் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தலைமை செயலகத்திற்கு தெரியப்படுத்தவும், அங்கத்தவர்களுக்கு மட்டும்:
இடம் பெயர்ந்த சகல அங்கத்தவர்களும் உடனடியாக தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நிர்வாகம்
யாழ் மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்.

தற்காலிக முகவரி,
'லக்சுமி வாசா'

பிரிவுகளுக்குட்பட்ட மக்கள் நலன்புரிச்சங்க நிர்வாக சபைக் கூட்டம் இன்று 1ஆம் திகதி ஞாயிறு காலை 8. 30 மணிககு நடைபெறவுள்ளது.

கொக்குவில் அலுவலகத்தில் நடைபெறவுள்ள மேற்படிக் கூட்டத்திற்கு நலன் புரிச்சங்கத் தலைவர் இ. சற்குருநாதன் தலைமை தாங்குவார்.

மேற்படி கூட்டத்தில் செயலறிக்கை, பொருள் அறிக்கை, மாவட்டம் பிரித்தல் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (த-3)

# 742ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலையொட்டி இதுவரை 742தேர்தல்வன்முறைகள் இடம் பெற்றிருப்பதாகபொலிஸ்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தேர்தல் வன்முறைகளில் 389 வன்முறைகள் பொது ஐக்கியமுன்னணியும், 171 வன்முறைகளில் ஐக்கிய தேசியக்கட்சியும், மக்கள் விடுதலைமுன்னனி, ஈ.பி.ஆர் எல்.எப், ஜனநாயக ஐக்கிய முன்னணி ஆகியன தலா 6 வன்முறைகளிலும் சம்பந்தப்பட்டுள்ளன. (வ)

குறை.காரிய நன்மை,

**தனுசு**

கீர்த்தி, தனவரவு. குடும்ப சுகம், நினைத்த காரியம் கைகூடும்.

**மகரம்**

தொழில் விருத்தி, அதிகாரம், நிலைமாறுதல்.

**கும்பம்**

தந்தைவழிஉறவு, பிரயாணம், சிறுவியாதி.

**மீனம்**

நண்பர்கள் விரோதம், அலைச்சல், நிம்மதியின்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்


யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.

தற்காலிக முகவரி,
'லக்சுமி வாசா'
குளப்பிட்டி றோட்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(கி/838)



## வீடியோ திரைப்படக் காட்சி

யாழ்/பட்டப் படிப்பு கல்லூரியில் வீடியோ திரைப் படக்காட்சி இன்று நண்பகல் 12.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் சூழல்சம்பந்தமான படக்காட்சி காண்பிக்கப்படும்.

ஆர்வம் உள்ளோர் வருகை தரலாம்.

பட்டப்படிப்புகள் கல்லூரி
57/13, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.



# சுயேச்சை குழு இல-3 (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி)

★ முழுமை பெற்ற புற்று நோய் ஆசுப்பத்திரியை யாழ். மாவட்டத்தில் நிறுவுவோம்.

★ முற்று முழுதாக தாய்க்குலத்தின் சிறப்பிற்காக பெண் டாக்டர்களைக் கொண்ட 'மகப்பேறு மருத்துவ மனையை' நிறுவுவோம்.



முதன்மை வேட்பாளர்

வேல்முருகு தங்கராசா

உங்கள் வாக்கைத் தொலைபேசிக்கே தந்திடுங்கள்

(கி-830)

# மக்களிற்கு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதேஎமது இலட்சியமாகும்

## ஈ.பி.டி.பி. அமைப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பிக்குபெருகிவரும் மக்கள் ஆதரவைக் கண்டு அஞ்சுகின்ற மக்கள் விரோத சக்திகள், ஈ.பி.டி.பி பற்றி தவறான அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் உருவாக்குவதுடன் அவர்களை குழப்ப நிலைக்குள்ளாக்கும் செயல்களில் ஈடுபட்டும் வருகின்றன. இந்த மக்கள் விரோத சக்திகளின் நடவடிக்கைகள் குறித்து எமது மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படிகேட்டுக் கொள்வதுடன், சம்பந்தப்பட்ட தீய சக்திகளின் செயற்பாடுகளை வன்மையாக ஈ.பி.டி.பி கண்டிக்கின்றது.

இவ்வாறு அக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கே. வி. குகேந்திரன், [வி கே. ஜெகன்) விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

எமது நேசத்திற்குரிய மக்களிற்கு நிரந்தரச் சமாதானத்தை உருவாக்குவதே எமதுஇலட்சியமாக கொண்டு ஈ.பி.டி.பி செயற்பட்டு வருகின்றது. இச் செயற்பாட்டுக்கு இடையூறாகவும் எமது கட்சி முன்னெடுக்கும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடும் விதத்திலும்மக்களை குழப்ப நிலைக்குள்ளாக்கும் விதத்திலும் புலிகள் என்ற போர்வையில் அநாமதேய கடிதங்களும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டு வருகின்றது.

மேலும் எமது கட்சியின் அண்டுப்பிரசுரங்களையும் சுவரொட்டிகளையும் கிழித்தெறிவதும் துண்டுப்பிரசுரம் வழங்கும் ஆதரவாளர்களின் அடையாள அட்டைகளைப் பறித்துச் செல்லும் கோழைத்தனமான செயல்களிலும் இந்த மக்கள் விரோத சக்திகள் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த 28 ஆந் திகதி யாழ். இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த எமது ஆதரவாளர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். காயமடைந்த ஆதரவாளரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல விரைந்து சென்ற எமது கட்சி உறுப்பினர்கள் சம்பவ இடத்திற்கு வாகனத்தில் சென்று இறங்கிய போது தவறுதலாக துப்பாக்கி ஒன்று வெடித்து சன்னம் தரையை நேக்கிப் பாய்ந்தது.

இவ் உண்மை நிலையைத் திரித்து சம்பவ இடத்தில் எமது கட்சியினர் ஆகாயத்தை நோக்கிச் சுட்டது எனவும் இதனால் மக்கள் பதட்டமடைந்தனர் எனவும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. எமது மக்களின் நிம்மதிக்காக உயிரை அர்ப்பணித்துச் சேவையாற்றும் ஈ.பி.டி.பிக்கு மக்களைப் பதட்டமடைய வைக்கவேண்டும் என்ற எண்ணம் கிடையாது.

கடந்த காலங்களில், மக்களை மரண அச்சத்துடன் வழிநடத்தியவர்களும், அண்மைக்கால தேர்தலில் மக்களால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டவர்களும் இன்று மக்களிடம் மீண்டும் வாக்குப் பிச்சை கேட்டுச் சென்று, தமக்கும் ஈ.பி.டி.பிக்கும் நல்ல உறவு இருப்பதாகக் பொய் கூறி தமது சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டு வருகின்றார்கள்.

மேலும் யுத்த அனர்த்தங்களால் இடம் பெயர்ந்த மக்களிற்கென 6 மாதகாலத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ள நிவாரணத்தினை எமது கட்சியின் ஏற்பாட்டினால் இன்றுவரையும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது. நிவாரணத்தை நம்பி எமது மக்கள் வாழக்கூடாது என்ற நிலைப்பாட்டினை ஈ.பி.டி.பி கொண்டிருப்பினும் எமது மக்களில் பெரும்பாலானோர் இதனையே நம்பி வாழ்வதை அறிந்து நிவாரணம் வழங்கல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளிலும் நாம் கவனமெடுத்து வருகின்றோம். ஆனால் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் எவ்வித பங்குபற்றல் இன்றி மதில் மேற் பூனையாக அரசியல் பேசுவோரினால் விலைக்கு வாங்கப்பட்ட சில கிராம சேவகர்கள், தம்மவர்க்கு வாக்களிக்காவிட்டால் நிவாரணத்தை நிறுத்தப் போவதாக மக்களை மிரட்டி வருகின்றார்கள்.

எதிர்வரும் 10ம் திகதி நடை பெறவுள்ள பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பி.யின் வெற்றியை நிச்சயப்படுத்திக் கொண்ட மக்கள் விரோதக் கட்சிகளும் ஏனைய குழுக்களும் தமது தோல்வியை மூடி மறைக்க ஈ.பி.டி.பி யின் மீது அவதூறுகளை அள்ளி வீசுவதுடன் எமது செயற்பாட்டை முடக்க மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகள் குறித்து விழிப்பாக இருக்கும்படி பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

மக்கள் விரோத சக்திகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுடன் ஜனநாயகச் செயற்பாட்டை முன்னெடுத்து எமது மக்கள் அனுபவித்து வரும் அரசியல் மற்றும் அன்றாடப் பிரச்சினைகளுக்குதீர்வு காண்பதற்காக, எதிர்வரும்தேர்தலில் ஈ.பி.டி.பிக்கு வாக்களித்து ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். (ந)

## செஞ்சிலுவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றது.

நாகேந்திரம் ஜெயதாஸ் மீசாலை கிழக்கு மீசாலை

அறுமுகம் (வல்லிபுரம்) சப் பச்சிமாவடி சங்கத்தானை சாவகச்சேரி

கதிரவேலு சந்திரன் பெரிய தம்பிரான் கோவிலடி கற்குளி சாவகச்சேரி

## பொதுமக்களை பாதிக்கும் விதத்தில் படையினர் ஈடுபடமாட்டார்கள்

### உயர்அதிகாரி ஈ.பி.டிபி. யினருக்கு உறுதி

(யாழ்ப்பாணம்)

கலட்டிப் பகுதியில் ஒட்டப்பட்டிருந்த திலீபன் நினைவுச் சுவரொட்டி தொடர்பாக பொதுமக்கள் இராணுவத்தினரால்துன்புறுத்தப்பட்டதை பொதுமக்களும் இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டார்கள்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட மக்கள், ஈ.பி.டி.பி அமைப்பிடம் முறையிட்டதை

## தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய நவராத்திரிவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில நேற்று முன்தினம வியாழக்கிழமை, ஸ்நபன அபிஷேகம், பூஜை, கும்பம் வைத்தல ஆகிய நிகழ்வுகளுடன் நவராத்திரி பூஜை ஆரமபமாகியது

நவராத்திரி பூஜைக்காலங்களில் தினமும் மாலை சாயரட்சைப் பூஜை, ஸ்ரீ சக்கர பூஜை, வசந்தமண்டபப் பூஜை கூட்டுவழிபாடு, அர்த்த சாமப் பூஜை ஆகிய பூஜைகள் இடம்பெறும்.

பத்தாம் நாள் சனிக்கிழமை விஜயதசமி விழா அன்று காலை பூஜை நடைபெற்று அம்மன் எழுந்தருளி வன்னி வாழை வெட்டல் நிகழ்வு முடிந்த பின் மு. ப. 11.00 மணிக்கு ஏடு தொடக்குதலும் நண்பகல் 12.00 மணிக்கு கேதார கௌரி விரதமும் ஆரம்பமாகும. (செ)

## வடமராட்சியில் நாளை இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

(புலோலி)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபையும் வடமராட்சி லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்திய கண் பரிசோதனையின் போது தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபையின் நிதி உதவியினால் இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளது.

இவ் இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் விழா இன்று 01 ஆம் திகதி வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி கே. மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ-52)

## கட்டட திணைக்கள ஊழியர் நிரந்தர நியமனம் தொடர்பாக பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கட்டடத் திணைக்கள அமைய ஊழியர்கள் தமது நிரந்தர நியமனம் தொடர்பாக அண்மையில் யாழ். மவாட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா அவர்களை நேரில் சந்தித்து மகஜர் ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளனர்.

1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியான 26/99 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் இவர்களுக்கு இந்த நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதுவரை வழங்கப்படாத இந்நிரந்தர நியமனங்களுக்கு டக்ளஸ் தேவானந்தா அவர்களின் சிபார்சுதேவையெனகட்டடத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்ததையடுத்து பிரஸ்தாப 14 ஊழியர்களும் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் இக்கோரிக்கையை விடுத்திருந்தனர்.

திணைக்கள ஊழியர்களின் கோரிக்கைக்கு இணக்கமான நிலைமையைத் தெரிவித்து தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மேற்படி இபார்சினைச்செய்து கொடுத்துள்ளார். [க]

## சமுர்த்தி ஊக்குவிப்பாளர் நியமனம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புதிதாக மேலும் 24 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் நியமனம்பெற்றுள்ளனர்.

இவர்களது பெயர்ப்பட்டியல் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு சமுர்த்தி அதிகார சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (செ- 120)

## போஷாக்கு இன்மையால் 28 தினங்களில் 25 சிசு மாணம்

அறுமுகம் (வல்லிபுர ) சப்
பச்சிமாவடி சங்கத தானை
சாவகச்சேரி
கதிரவேலு சந்திரன் பெரிய
தம்பிரான் கோவிலடி கற்குளி
சாவகச்சேரி
நமசிவாயம் ராசரத்தினம்
நுணாவில் மேற்கு சாவகச
சேரி
புஷ்பலிங்கம் வல்லிபுரம்
சரவெட்டி
ச யோகரஞ்சினி முள்ளி
ஒழுங்கை அரியாலை
சின்னத்தம்பி சற்குணநாதன்
மீசாலை மேற்கு மீசாலை
அப்பாக்குட்டி தாமோதரம்
பிள்ளை கிராஞ்சி ஒழுங்கை
மட்டுவில் தெற்கு சாவகச்
சேரி
பாலசிங்கம் ஜெயபாலன்
ஞானவைரவர் கோவிலடி
உரும்பிராய் (க)

(யாழ்ப்பாணம்)

கலட்டிப் பகுதியில் ஒட்டப்பட்டிருந்த திலீபன் நினைவுச் சுவரொட்டி தொடர்பாக பொதுமக்கள் இராணுவத்தினரால்துன்புறுத்தப்பட்டதையடுத்து. இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்கள் மீது வன்முறைகளை பிரயோகிக்கக்கூடாது என்றும் இதற்கு இராணுவத்தினரின் உறுதிமொழி அளிக்கப்பட வேண்டும் என்றும் இராணுவத்தினரை ஈ.பி.டி.பீ கேட்டுக் கொண்டுள்ளது.

திலீபன் நினைவுச் சுவரொட்டி கலட்டி அமெரிக்க மிசன் பாடசாலையில்ஒட்டப்பட்டிருந்ததை அடுத்து,இப்பாடசாலை அதிபரும்,குருநகரில்இருந்து இடம் பெயர்ந்து அங்கு தங்கியிருந்த அப்பாவி பொதுமக்களும் இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டார்கள்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட மக்கள்,ஈ.பி.டி.பி அமைப்பிடம் முறையிட்டதையடுத்துஈ.பி.டி.பி அமைப்பு 512 வது படைப்பிரிவின் உயரதிகாரிகளுடன் மேற்படி சம்பவம் நடைபெற்றது குறித்து பேச்சு நடத்தியது.

இதனையடுத்து எதிர்காலத்தில்,அப்பாவி மக்களைப் பாதிக்கும் வகையில் எந்தவொரு நடவடிக்கைகளிலும் இராணுவத்தினர் ஈடுபடமாட்டார்கள் என ஈ.பி.டி.பி அமைப்பிற்கு உயரதிகாரிகள் உறுதிமொழி அளித்துள்ளனர். (க)

# போஷாக்கு இன்மையால் 28 தினங்களில் 25 சிசு மரணம்

கிளிநொச்சிமாவட்ட அரசினர் வைத்தியசாலையில் எட்டு மாதத்தில் பிறந்து. 28 தினங்களுக்குள் 25 சிசுக்கள் போஷாக்குக் குறைபாடு காரணமாக மரணமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் காலப்பகுதியில் கிளிநொச்சி வைத்தியசாலையில் 970 பிறப்புகளும் நடைபெற்றுள்ளது என வைத்தியசாலைப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

வன்னிப் பிரதேசத்தில் போதிய சத்துணவுகள் பெற்றுக் கொள்வதில் மக்கள் பலத்த கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். கர்ப்ப காலத்தில் போஷாக்கு உணவு கிடைக்காததனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதென வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

"ஒன்றாய் இன்றும் நாமில்லையேல்
விடுதலை என்றும் எமக்கில்லை"
செயலதிபர், க. உமாமகேஸ்வரன்

ஒற்றுமையை வளர்த்திட அதன் சின்னமாய்
விளங்கும் எம்மை ஆதரித்திடுவீர்!

X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட் + ஈரோஸ்)
(1689)

# பெண்கள் உட்பட 26 புலிகள்

# கொழும்பு மாநகருள் ஊடுருவல்

## புலனாய்வுத்துறை தகவல்

(கொழும்பு)
கொழும்பு மாநகருள் பெண்கள் உட்பட 26 விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஊடுருவியிருப்பதாக இரகசிய தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து கொழும்பு மாநகரில் அதியுச்ச பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எதிர் வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் குழப்பும் வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவே மேற்படி புலி உறுப்பினர்கள் தலைநகர் புகுந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் கொழும்பின் முக்கிய சந்திகளில் புலனாய்வு பொலிஸார் சிவில் உடையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

24 மணி நேரமும் கண்காணிப்புப் பணிகள் தீவிரத்துடன் மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (உ)

# வடபகுதிமீன்பிடிக்கும்நேரத்தை அதிகரிக்க கடற்படையினர் இணக்கம்

(யாழ்ப்பாணம்)
வலிகாமம், வடமராட்சி, தீவகம் ஆகிய கடற் பிரதேசங்களில் கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்கும் நேரம் மற்றும் மீன் பிடிக்கும் தூரம் என்பவற்றை அதிகரிக்க கடற்படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடைபெற்ற கடற்படை உயர் அதிகாரிகளுடன் கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட சந்திப்பில் இவ்விணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி யின் ஏற்பாட்டில் ஒழுங்குசெய்யப்பட்ட இச் சந்திப்பு, வடபிராந்திய கடற்படைப் பிரதித் தளபதி தலைமையில் நடைபெற்றது. இச் சந்திப்பில் தலைவர் டக்ளஸ் தேவானந்தா உட்பட ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களான கே.வி. குகேந்திரன், எஸ். சிவதாசன், எஸ். தவராசா, மதனராஜா ஆகியோருடன் யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மீனவர்கள் எதிர்கொண்டு வரும் மேலும் பல நடைமுறைப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவும் இச் சந்திப்பில் கடற்படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள மீன்பிடிப்பதற்கான நேரம், மீன்பிடிக்க கடலில் செல்லும் தூரம் ஆகியன கட்டம் கட்டமாக மேலும் அதிகரிக்கப்படும் என்றும், நீங்கள் 24 மணிநேரமும் கடலில் மீன்பிடிக்க வேண்டும் என்பதே எமது விருப்பம். ஆனால் தற்சமயம் இவ் விருப்பத்தை நிறைவேற்ற முடியாமல் உள்ளது என்றும் வடபிராந்திய கடற்படை பிரதித் தளபதி இச் சந்திப்பின்போது கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்தார். (க)

# கோண்டாவிலில் அமரகவி ச.ச.நிலைய புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)
கோண்டாவில் மேற்கு அமரகவி சன சமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழாவும் பாலர்பாடசாலைக் கட்டட அடிக்கல் நாட்டு விழாவும் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பொ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத்தலைவர் க. மணி பல்லவராஜன் அவர்கள் கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபை உபதலைவர் து. தவராசா, நல்லூர் பிரதேச சபை செயலாளர் செ. செல்வரத்தினம், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சி. கோபிநாத், வலி-தெற்கு பிரதேச சபை உறுப்பினர் க. துரைசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டார். இச்சனசமூக நிலைய அபிவிருத்திக்காக ஈ.பி.டி.பியின் ஏற்பாட்டினால் 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# நிவாரணப் பொருட்களின் நிறையில் பெரும் மோசடி

## பொதுமக்கள் புகார்

(ஈச்சமோட்டை)
இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணப் பொருட்களின் நிறையில் பெரும் மோசடி செய்யப்படுவதாக பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் எத்தனையோ குடும்பங்கள் இந் நிவாரணப் பொருட்களையே நம்பியிருக்கிறார்கள்.

இத்தகைய நிலையில் மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இப்படிச் செயற்படலாமா? என பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இனிமேலாவது சம்பந்தப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் பொதுமக்களின் 'வயிற்றில் அடிக்காமல், செயற்பட்டால் நன்று என பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (செ-59)

# பனை அபிவிருத்தி சபை தலைவர் யாழ்ப்பாணம் விஜயம்

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் எம். பாக்கியநாதன் உத்தியோகபூர்வ விஜய மொன்றினை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் யாழ். மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்டு வருகின்ற செயல் திட்டங்களை இவர் அண்மையில் பார்வையிட்டுள்ளார்.

அத்துடன் மானிப்பாயில் சபையின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள வினாகிரி தயாரிக்கும் தொழிற்சாலைக்கான அடிக்கல்லையும் தலைவர் எம். பாக்கியநாதன் நாட்டிவைத்துள்ளார். என சபையின் பொது முகாமையாளர் எஸ். கோகுலதாசன் தெரிவித்துள்ளார். (77)

# புலிகள்தரப்பில் உயிரிழந்தோர்

தென்மராசி கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுவரும் ஓயாத அலை 4 நடவடிக்கையின்போது

- சேகா (கந்தசாமி தவராசா) யாழ்ப்பாணம்
- தாவீதன் (சபாநாயகன் சுபாஸ்கரன்) மல்லாவி
- நேசமகள் (கதிர்காமநாதன் கற்பகதனி) யாழ்ப்பாணம்
- எழில்நிலா (கணேஷ் ஜெயகௌரி) பூநகரி
- யாழினி (திருச்செல்வம் கவிஷ்ரா) யாழ்ப்பாணம்
- குயிலிசை (மகேந்திரன் தயாளினி) வவுனியா
- நன்நெறி (கருத்தரலட்சுமி பிரபா) விஷ்வமடு

எல்லைப்படை, சிறப்பு எல்லைப்படை வீரர்களான

- கப்டன் உதயசங்கர் (செல்லத்துரை மங்களேஸ்வரன்) யாழ்ப்பாணம்
- தீபன் (பாலசுப்பிரமணியம் பிரதீபன்) யாழ்ப்பாணம்
- திலீபன் (தினகரன் திலீபன்) பூநகரி

ஆகிய போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அரசியலில் ஈடுபடலாம்

## பிரதமர் பிரச்சாரம்

(கொழும்பு)
சமுர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் தமது கடமை நேரத்துக்குப் பின்னர் அரசியலில் ஈடுபடுவதற்கு எவ்வித தடையும் இல்லை. இவ்வாறு ஹாவத்தையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: எந்தவொரு அரசாங்க உத்தியோகத்தரும் தமது கடமை நேரத்துக்குப் பின்னர் அரசியலில் ஈடுபட முடியும் எனவும், வாக்காளர் பட்டியலில் பெயருடையவர்கள் தேர்தலில் வாக்களிக்க உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டையோ ஸ்ரிக்கரோ தேவையில்லை என்றும் கூறினார். (ந-2)

# வடபகுதியில் காணாமல் போனோர் தொடர்பாக உயர் மட்டப் பேச்சு

(யாழ்ப்பாணம்)
வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் தொடர்பாக முக்கியபேச்சுவார்த்தைஒன்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி செயலர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இடம் பெற்றுள்ளது.

மனித கௌரவத்திற்கான மன்ற வடபிராந்திய செயலக இணைப்பாளர் ஐ. சிவராசா விரிவான முறையில் கலந்துரையாடியதாகவும் இது விடயம் தொடர்பாக உரிய அமைச்சருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென செயலாளர் நாயகம் உறுதி அளித்ததாகவும் சம்பந்தப்பட்டவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பந்தப்பட்டோரின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது பணிமனைக்கு வந்து பெயர் விபரங்கள் குறித்துஉறுதிப்படுத்துமாறும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# செய்தித் துளிகள்

## வல்லிபுர ஆலய மஹோற்சவம்

(புலோலி)
சரித்திரப் பிரசித்திபெற்ற விஷ்ணு ஆலயமான அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் 28ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

5ம் திகதி குருக்கட்டு விநாயகர் தரிசனத் திருவிழாவும், 6ம் திகதிவெண் ணெய்த்திருவிழாவும், 7ம் திகதி துகில்த் திருவிழாவும், 8ம்திகதி பாம்புத்திருவிழாவும், 9ம் திகதி கம்சன் போர்த்திருவிழாவும், 10ம் திகதி வேட்டைத் திருவிழாவும், 11ம்திகதி சப்பறத் திருவிழாவும், 12ம்திகதி தேர்த் திருவிழாவும், 13ம் திகதி சமுத்திர தீர்த்தத்திருவிழாவும், 14ம்திகதி கேணித் தீர்த்தத்திருவிழாவும், கொடியிறக்கமும் 15ம் திகதி ஆஞ்சநேயர் மடையும் நடைபெறுகின்றன. (செ-52)

## செயலமர்வும் கருத்தரங்கும்

(கோப்பாய்)
கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளில் தரம் இரண்டில் கல்விகற்பிக்கின்ற ஆசிரியர்களிற்கான பாட மேம்பாட்டுத் திட்ட செயலர்வும் கருத்தரங்கும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆரம்பக்கல்வி முதன்மை ஆசிரியர் நா. சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். (செ-79)

## அறிமுகவிழாவும் கௌரவிப்பும்

(நெல்லியடி)
வடமராட்சி கலை இலக்கிய நண்பர்கள் நடத்துகின்ற தெணியான் எழுதிய "காத்திருப்பு" நாவல் அறிமுக விழாவும், ஓவியர் ரமணியின் கௌரவிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.00மணிக்கு பேராசிரியர் நா. ஞானகுமாரன் தலைமையில் தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (செ-18)

## இன்று விளையாட்டுப் போட்டி

[புலோலி]
சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன்உதவு கூட்டுறவுச் சங்க வத்தனை மழலைகள் கல்விப் பூங்கா வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பருத்தித்துறை மதுவரிப் பொறுப்பதிகாரி .என். சோதிநாதன் தலைமையில் நடைபெறுகின்றது.

பருத்தித் துறை பிரதேச செயலர் ஏ. சிவசுவாமி பிரதம விருந்தினராகவும் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீ ரங்கேஸ்வரன் சிறப்பு விருந்தினர்களாகவும்கலந்து கொள்கின்றனர். (வ-52)

★ ★ ★

(தென்மராட்சி)
ஊரெழு மேற்கு சரஸ்வதி அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத் நடைபெறவுள்ளது.

ஊரெழுகிராம சேவையாளர்கே.கிருஸ்ணன் பிரதம விருந்தினராகவும் அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் வி. ஜீ. தங்கவேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (செ-77)

## விசேட பொதுக்கூட்டம்

(ஆவரங்கால்)
புத்தூர் அரசினர் வைத்திய சாலை அபிவிருத்திச் சபையின் விசேட பொதுக்கூட்டம்இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு மேற்படி வைத்தியசாலையில்நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு புத்தூர் பிரதேச சபைஉப அலுவலகத்திற்குட்பட்ட சன சமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-57)

## பட்டதாரி பயிலுநருக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)
வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர், வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் பட்டதாரி பயிலுநர்நியமனம் தொடர்பாக யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் ஈ.பி.டி.பியின செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் கோரிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளனர்.

ஏற்கனவே வடபிராந்திய போக்குவத்துச் சபையில் பட்டதாரி பயிலுநர் பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டு அதனை ஏற்றுக்கொள்ளாத ஐவரது இடங்களுக்கு வேறு ஐவரின் பெயர்களை இச்சங்கத்தினர் சமர்ப்பித்து அதனைச் சிபார்சு செய்யுமாறு தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் கேட்டுக் கொண்டனர்.

இது விடயத்தில் ஆவன செய்வதாக தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உறுதியளித்துள்ளார். (க)

# பாடசாலை மாணவனின் முன்மாதிரிக்கு பலரும் பாராட்டு தெரிவிப்பு

(கோப்பாய்)
உரும்பிராய் புனிதமிக்கேல் ஆலய உற்சவத்தின் போது தவறவிட்டதாகக் கருதப்பட்ட காப்பு ஒன்றை கண்டெடுத்த றோ.க.த.க.பாடசாலைமாணவன் அக்காப்பை உரியவரிடம் கையளித்துள்ளான்.

மேற்படி பாடசாலை அதிபர் மூலமாக காப்பு கையளிக்கப்பட்டதையடுத்து மாணவனின் முன்மாதிரியை பலரும் பாராட்டியுள்ளனர்.

## இன்று ஒரு தகவல்

# நல்லதை செய்வதற்கு நல்மனம் வேண்டும் தர்மரின் நல்லுபதேசமும் இதுவே

ஒரு நாள் பாண்டவர்கள் ஐவரும் திண்ணையில் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தார்கள்.

பஞ்சாலி அவர்களிற்கு வேண்டியதை பரிமாறும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாள்.

அப்போது உடல் உலர்ந்து, உடை கந்தலாகி, தலைமயிர் சடையாகி வறுமையின் கோலம் இதுவேஎனக்காட்டும் வடிவாய் அவர்கள் முன் ஓர் பிச்சைக்காரன் வந்தான்

அவன் தருமரிடம் ''ஐயா வறுமையால் வாடுகிறேன். ஏதாவது உதவி செய்யுங்கள்'' என்றான் உடனே தருமர் தனது இடது கையால பக்கத்தில் இருந்த வெள்ளிக் கிண்ணத்தை எடுத்து தானமாக கொடுத்தார் வறியவனே சென்றவுடன் பீமன் கேட்டான். ''அண்ணா இடது கையால் தர்மம் செய்வது பாவமாகாதா? அதற்கு தர்ம பலனும் இல்லையே. எல்லா சாஸ்திரங்களையும் அறிந்த நீங்கள் இப்படிச் செய்யலாமா? என்றான்.

''தம்பி வறியவன் துயர் கேட்டதும் மனமிளகி அவனுக்கு வெள்ளிக்கிண்ணத்தைக் கொடுக்கும் எண்ணம் ஏற்பட்டது. நான் சாப்பிட்டு விட்டுக் கைகழுவி வந்த பின்பு தரலாம் என்றால் அதற்குள இந்த பொல்லாத மனம் எப்படி மாறிவிடுமோ?

ஒருவேளை வேறு ஏதாவது பொருளைக் கொடுத்தால் போதாதா, வெள்ளிக்கிண்ணம் எதற்கு என்று தோன்றலாம். எனவே நல்லதைச் செய்ய நினைக்கும் போது அந்த நொடியிலேயே செய்வது நல்லது அதனால் நமக்கு ஏற்படும் நன்மை தீமையைவிட பிறருக்கு ஏற்படும் நன்மையே முக்கியம் என்றார் தருமர்.

நன்றி ஞானபூமி

## ★ கொழும்பு நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது, தேடுதலில் போதைவஸ்து கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு கொழும்பு நகரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பிராந்தியத்தில் உள்ள சகல பொலிஸ் பிரிவுகளிலும் வதிவிடங்களின் பொலிஸ் பதிவுகள் மீள பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. இந்நடவடிக்கைகள் கடந்த வியாழன் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வெள்ளவத்தைப்பகுதியில் தேடுதலில் ஈடுபட்டிருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் சந்தனக்குறுப்பு தலைமையிலான குழுவினர் சிறிசுந்தரராம மாவத்த வீடொன்றில் 30 பைகளில் போதைவஸ்து இருப்பதைக் கண்டுபிடித்து அதனை மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

## பேருந்துச் சேவை குறைப்பு பயணிகள் பெரும் திண்டாட்டம்

(கல்வயல்)

கடந்த 22ம் திகதி குறிகாட்டுவானில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தவடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துவண்டி ஒன்று புறப்பட்டசிறிது நேரத்தில் பேருந்து வண்டியின் ஒரு பக்க முன் சில்லும் பின் சில்லும் மண்ணினுள் புதைந்து பேருந்து சரியத் தொடங்கியது.

சாரதி புத்தி சாதுரியமாக பேருந்தை உடனடியாக நிறுத்தி பயணிகளை வாசலூடாகவும் யன்னல்களூடாகவும் வெளியேற்றினார்.

பயணிகளால் பேருந்து தாங்கிப் பிடிக்கப்பட்டு வீதிக்கு பேருந்து கொண்டு வரப்பட்டு பயணிகள் ஏற்றப்பட்டு இரவு 7 மணிக்குப் பின்னரே யாழ். பேருந்து தரிப்பிடத்தை வந்தடைந்தது.

கடந்த 22ம் திகதி யாழ்ப்பாணத்திற்கும் புங்குடுதீவு குறிகாட்டுவானுக்கும் இடையிலான சேவை குறைக்கப்பட்டதாலேயே பயணிகள் இத்தகைய அவலத்திற்குள்ளாக நேரிட்டது.

எனவே சம்பநதப்பட்டவர்கள் இதற்குரிய நடவடிக்கையை எடுத்து தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்துச் சிரமங்களை குறைக்க வழி செய்ய வேண்டும் என பொது மக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-111)

## இளைஞர் விடுதலை

(கரணவாய்)

கரணவாய் பகுதியில் கடந்த 19ம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட மட்டுவில் தெற்கைச் சேர்ந்த எஸ். இராஜரட்ணம் கடந்த 20ந் திகதி வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் விடுதலை செய்யப்பட்டார்.

ந-2)

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆங்கில தகுதிகாண் போட்டிப் பரிட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2ஆம்திகதி நடைபெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

(க-12)

## நவராத்திரி பூஜைகள்

(நெல்லிபடி)

வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலயத்தில் நவராத்திரி பூஜைகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

நவராத்திரி காலங்களில் தினமும் மாலை வேளையில் பக்தர்களால் கூட்டுப் பிரார்த்தனையும் நடத்தப்படுகின்றன. (செ18)

## விதை இனங்கள் வழங்கல்

(இணுவில்)

வதிவிடவேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள பயனாளிகளுக்கு விதை இனங்களும் உபகரணங்களும் கிராம சேவையாளர் அலுவலத்தில வைத்து வழங்கப்படுகின்றன.

இவ்விதை இனங்களை பங்டினிக்செதிரான நிறுவனமும், ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியங்களின் மனித நேய அமைப்பும் இணைந்து வழங்கியுள்ளன.

இவற்றில் வெண்டி, தக்காளி கத்தரி, பயிற்றை, பூசணி, கெனப்பி, சிறகவரை, பாகல், புடோல் போன்ற விதையினங்கள், மண்வெட்டி, வாளி, கத்தி என்னும் உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

(த-49)

## நெல்விதைப்பு தீவிரம்

(வரணி)

வரணிஇயற்றாலை, மந்துவில் ஆகிய பகுதிகளில்வசிக்கும் மக்கள் தற்போது நெற்செய்கையில் ஆர்வம்காட்டிவருகின்றனர்.

எனினும் இப்பகுதிகளில் எறிகணைகள் வீழ்ந்து வெடிப்பதாலும் கட்டாக்காலிகளின் அட்டகாசத்தின் மத்தியிலும் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே இந் நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடுகின்றனர். (க-த-28)

## சணல் விதைக்கு தட்டுப்பாடு

(கல்வயல்)

வலிகாமம் வடமராட்சிப் பகுதியிலுள்ள மேட்டு நிலங்களில் மாற்றுப்பயிர்ச் செய்கைக்கு முன் மேற்கொள்ளப்படும் இயற்கை வளமாக்கியான சணல்செய்கைக்கு இம்முறை விதை தட்டுப்பாடு நிலவுகிறது.

தென்மராட்சிப் பகுதியிலுள்ள மக்கள் இடம்பெயர்வினால் சிறுதானிய செய்கையில் இம்முறை ஆர்வம் காட்டவில்லை.

## நவராத்திரி நாயகியை வலம்புரியில் வழிபடுவோம்



### நவசக்தி நாயகியே

நவசக்தி நாயகியே நாம் வணங்கும் தேவியே
நம் நிலத்தில் அருள்பொழியும் அம்மையே
நம் இனத்தின் விடிவுக்காய் துயரதனை
ஒழித்திடவே சக்தியினை அளித்திடம்மா!

பா. கௌரிபாலன்
யாழ். இந்துக் கல்லூரி
தரம்-9

★ ★ ★

### இன்பம் கிட்டும்

புரட்டாதித் திங்கள் அதிலே
பூரண கும்பத்தில் ஏற்றியே
செல்வம் வீரம் கல்வியை வேண்டி
தேவியர் மூவரை வணங்கிட
தேவிட்டா இன்பம் கிட்டுமே!

சி பூர்ணிமா
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி
க. பொ. த உயர்தரம்

★ ★ ★

### இலக்குமிப் பா

இலக்குமியின் இருதாளை இந்தருள் வேண்டின்
விலக்குவாள் எங்கள் வேதனை - துலக்கமாய்
செல்வம் கொழித்திட, சுகமாய் வாழ்ந்திட
வல்லவள் அளிப்பாள் வரம்!

வி பராபரன்
யாழ் இந்துக் கல்லூரி
க. பொ. த. உயர்தரம்

★ ★ ★

### திருமகளே வருக

திருமகளே வருக திருவதனம் காட்டு
திருவிழந்த பூமியில் ஒளி விளக்கை ஏற்று
திசை சிதறும் மக்கள் திரும்பி இல்லம் சேர்ந்து
திருவிளக்கை ஏற்ற அருள் புரிவாய் தாயே!

அ. தாட்சாயிணி
இராமநாதன் கல்லூரி
க. பொ. த. உயர்தரம்

★ ★ ★

### ஆறுதல் சொல்லம்மா

அலை மகளாய் வீற்றிருந்து ஆட்சி புரியும் அம்மா
அவனிக்கு நீ வந்து ஆறுதல் சொல்லம்மா
நிலமகளின் கருணையால் நித்திலத்தில் வாழ்பவர்க்கு
நிலையான செல்வத்தை நேயமுடன் தந்திடுவாய்.

கந்தசாமி பகீரதி
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
தரம்-9A


## தேர்தல் சுவரொட்டி ஒட்டிய நபர் மீது இனம் தெரியாதோர் தாக்குதல்

### யாழ் கே.கே.எஸ்.வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கே. கே. எஸ். வீதியில் சில தினங்களுக்கு முன்னர் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த ஈ. பி. டி. பி. குழுவினர் மீது இனந் தெரியாத ஒருவர் தாக்கியதில் அக்கட்சியைச் சார்ந்த ஒருவர் நெற்றியில் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தினை அடுத்து அக்கட்சியைச் சார்ந்தோர் தாக்குதல் நடத்திய நபரினைத் தேடியலைந்ததாகவும் தெரியவருகிறது. (ந-4)

த. சுபத்திரன் (றொபேட்)

மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்திற்காகவும் வாக்களிப்போம்!

தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்

சுயேச்சைக்குழு - 2 X



அ. வரதராஜப் பெருமாள்

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
(ஈ. பி. ஆர். எல்.எவ்)

ஜேர்மன் விமான நிலையத்தில்

# பாரிய குண்டு வெடிப்பு

# விமானநிலையம் ஸ்தம்பிதநிலையில்

## இரண்டாம் உலகயுத்த குண்டாம்

(பேர்லின்)

இரண்டாம் உலக யுத்தத்தில் விடுபட்ட குண்டொன்று நேற்று முன்தினம் ஜேர்மனியில் வெடித்துள்ளது.

ஜேர்மனியில் மேற்கு பகுதியில் இக் குண்டு வெடித்துள்ளது.

பயணிகளை ஏற்றிக் கொள்ள ஒருவிமானம்சென்றதன்பின் இக் குண்டு வெடித்ததாகவும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லையென்றும் 14 மீற்றர் அளவான குழி இந்தக்குண்டு வெடித்த இடத்தில ஏற்பட்டதென்றும தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து விமான நிலையம் ஸ்தபிம்பித நிலை அடைந்து விட்டதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க து)

உலக தரிசன அறிவுப் போட்டி-02ல் வெற்றி பெற்றவர்களுடைய பெயர் விபரங்கள் 5ஆம்திகதி வலம்புரிப் பத்திரிகையில் வெளியாகும்.

## 3 மணி 44 நிமிடத்தில் புதியவீடு உதயம் நியூசிலாந்தில் புதிய சாதனை

(வெலிங்டன்)

நியூசிலாந்தில். தென் ஆக்கிலாந்து பகுதியில் 100 மேசன்மார்கள் மற்றும் வர்ணந்தீட்டுவோர் சேர்ந்து ஒரு வீட்டை 3 மணித்தியாலம் 44 நிமிடம் 59 விநாடியில கட்டி உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார்கள்

இதற்கு முன் அமெரிக்காவில் 46 மணி 9 நிமிடம் 15 விநாடியில் கட்டப்பட்ட சாதனையை இது முறியடித்திருக்கிறது.

[து]

## தமிழ் நாட்டின் விடுதலைப் போராளி சந்தனமரக் கடத்தல் வீரப்பனே

### ஒலிநாடாவில் தெரிவிப்பு

[சென்னை]

தமிழ் நாட்டின் விடுதலைப் போராளியாக தான் முழுமையாக மாறிவிட்டதாக சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசிற்கு கொடுத்து அனுப்பிய ஒலிநாடாவிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி ஒலிநாடா சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் தமிழர் தேசிய கட்சித் தலைவர் ப.நெடுமாறன் அண்மையில் ஒலிபரப்புச் செய்யப்பட்டபோதே மேற்கூறப்பட்டவிடயம் அம்பலத்திற்குவந்தது

அவ் ஒலிநாடாவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வீரப்பன் தான் தமிழ் நாட்டில் விடுதலைப் போராளியாகமாறி விட்டதாகவும் நடிகர் ராஜ்குமாரை கடத்தியதின் மூலம தான் சிறையில் இருக்கும் தடாக்கைதிகளை விடுவிக்க முடியுமென்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கர்நாடகத் தமிழர்களுக்கு இராணுவம் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டதுடன் இந்திய நீதித்துறை காவல்துறை என்பவற்றை சாட்டியுள்ளார்.

இதேவேளை தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கைக்கு ஆயுதம் தூக்கி போராடப்போவதாகவும் தெரிவித்தார். (து)

## கனடா பிரதமர் ருடே காலமானார்

(ஒட்டவா)

கனடாவின் முன்னாள் பிரதமர் ருடே கடந்த வியாழன் தனது சொந்த ஊரில்காலமானார்.

தனது 80 தாவது வயதில் காலமான இவர் கனடாவின் முதலாவது பிரதம மந்திரியாவார் கனடாவின் சிற்பி என்று சொல்லப்படும் இவர் 1968 தொடக்கம்79வரையும் பின்பு 80ஆம் ஆண்டுதொடக்கம் 84ஆம் ஆண்டு வரை பிரதமராக இருந்தாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

(து)

## பாலஸ்தீனர் நான்கு பேர் இஸ்ரேலிய பொலிஸாரால் சுட்டுக் கொலை

(ஜெருசலேம்)

ஜெருசலேம நகரில் 4 பலஸ்தீனர்கள் இஸ்ரேலியப் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜெருசலேமிலுள்ள யூதர்களும முஸ்லிம்களும் தமக்கானதாக உரிமை கோரும் புனித தலம் ஒன்றில் வழிபாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட தகராறில் இச்சம்பவம் ஏற்பட்டது.

கடந்த மூன்று நாட்களாக மேற்குக் கரைப் பகுதியில் இஸ்ரேல் பலஸ்தீனத் தரப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு பெரும் கைகலப்பாக வளர்ந்தது. இக் கைகலப்பை அடக்குவதற்காக பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்ட போதே இவ் உயிரிழப்பு ஏற்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

## சாவகச்சேரியில் இயங்கிய வங்கிகளின் முக்கிய ஆவணங்களை பாதுகாப்பாக அகற்ற முயற்சி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் செயற்பட்ட வங்கிகளின் முக்கிய ஆவணங்களை பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்து வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நம்பகரமான தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது விடயம் தொடர்பாக இராணுவ உயர் அதிகாரிகளுடன் வங்கி உயர் அதிகாரிகள் பேசுவார்த்தை நடத்திக் கொண்டிருப்பதாகவும் அனேகமாக இன்னும்சிலதினங்களில் இவ் ஆவணங்கள் எடுத்து வரப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் வங்கியின் இணைப்பாளர் மல்லசேகரா நிலைமைகளை நேரில் அறிவதற்காக சாவகச்சேரிக்கு நேரடி விஜயம் மேற்கொண்டதாகவும மேலும்அறியப்படுகிறது.

இலங்கைவங்கி,மக்கள்வங்கி தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் ஆவணங்களே இவ்வாறுபாதுகாப்பான இடங்களிற்கு எடுத்து வரப்படவிருப்பதாக மேலும் அறியப்படுகிறது.

இது விடயம் தொடர்பாக பாதுகாப்பு படையினரின் அனுமதியை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(க-12-77)

## சிறைவாசம் அனுபவிக்க தயாராகும் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ்

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவும் மத்திய அமைச்சர் பூட்டா சிங்கும் 7 ஆண்டுகள் சிறை செல்வார்கள்.

நேற்று முன்தினம் புதுடில்லி வித்தியா பவனில் நடைபெறும் சிறப்பு நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

இலஞ்ச ஊழல் மோசடிக் குற்றச் சாட்டின் பேரில் தொடரப்பட்ட வழக்கின் நரசிம்மராவும் பூட்டாசிங்கும் பதவியில் இருந்த பொழுது இலஞ்சம் வேண்டினார்களென்றும் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று தொடரப்பட்ட வழக்கே விசாரணையில் இருந்தது என்று இந்த வழக்கில் இவர்களுடன் முன்னாள் அமைச்சர்கள் பலரும் அதிகாரிகள் தொடர்பு பட்டிருந்தார்கள் என்றும் பலநாட்களாகச் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தனர் இந்த வழக்கிலிருந்து 9 பேர் விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள் அவர்கள் மேல் தொடுக்கப்பட்ட வழக்குகளும் வாபஸ் பெறப்பட்டிருப்பதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்த பொழுது ஜார்கண் முத்திமோட்சா கட்சிக்கு இலஞ்சம் கொடுத்து வாக்கு வாங்கி அரசைத் தப்பவைக்க முயற்சித்தார்கள் என்ற ஊழல் வழக்கின் மீதே மேற்படி தீர்ப்பு ஊர்ஜிதம் செய்யப் பட்டுள்ளது.

மக்கள் நிரம்பியிருந்த விசேட நீதிமன்றத்தில் குற்றத்துக்குரிய காரணங்களை எடுத்துக் கூறிய நீதிபதி அடுத்தமாதம் 13ம் திகதி இதற்குரிய தீர்ப்பினை வழங்குவதாகச் வழக்கினை ஒத்திவைத்தார்.

இதே வேளை இக்குற்றத்திற்கு 7 வருடம் சிறைதண்டனை இருவருக்கும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)



தமிழ் மக்களை வதைக்கும்





சுரேஸ் பிரேமச்சந்திரன்

தமிழ் மக்களை வதைக்கும்
அவசரகாலச் சட்டத்தை இல்லாதொழிக்க
தோடம்பழம் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

# சுயேச்சைக் குழு-1 X

ஈ. பி ஆர். எல். எவ். சுரேஷ் தலைமை

இலக்கம் 7



தர்மராஜா வில்சன்

(சி-827)



# பாராளுமன்றத் தேர்தல் யாழ்.மாவட்டம் 10-10-2000

தமிழினம் தலை நிமிர்ந்து நின்றிட, தந்தையின் இலட்சியம் வென்றிட,
தந்திடுவோம் எம் பொன்னான வாக்குகளை உதயசூரியனுக்கே!

# தமிழர் விடுதலைக் கூட்டணி X

(சி-818)

''அறன் இழக்காது
அல்லவை நீங்கி மறன்
இழக்கா
மானம் உடையாது
அரசு''
- குறள்-

வலம்புரி

## பிரதமரின் பகற்கனவு

சிறிமாவோ பண்டார நாயக்காவின் கட்டாய ஓய்விற்குப் பின் புதிதாகப் பதவியேற்றபிரதமர்இரட்ணசிறி விக்கிரம நாயக்காவின் பேச்சுக்கள் பொறுப்பான கதிரையில் பொறுப்பற்ற ஒருவர் நியமனம் பெற்றுள்ளதையே உறுதிப்படுத்துகிறது.

பதவியேற்றகையுடன் பௌத்த துறவிகளை ஆசுவாசப்படுத்தும் பணியை செவ்வனே செய்வதற்காக அவர்விட்டஅறிக்கைகளும், உரைகளும் தமிழர்க்கு எதிரானவர் என்ற பேச்சையே பிரதிபலிக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினை இத்தனை தூரம் வியாபிப்பதற்கு சிங்களப் பேரினவாதிகளின்உணர்ச்சிவசப்பட்ட உரைகளே காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. அதில் பிரதமரின் சமகாலப் பேச்சையும் சேர்த்தே பார்க்க வேண்டியுள்ளது.

பொதுத் தேர்தலுக்கு முன்னதாக ஆனையிறவை மீண்டும் படையினர் கைப்பற்றி விடுவர். அதன்பின் தரைப்பாதை திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதமர் அண்மையில் கூறியுள்ளார். இது ஒரு கற்பனைக் கதையாக, தேர்தல் மேடை நாடகத்தின் வீராப்பு வசனமாக அமையலாமே யொழிய நடைமுறைச் சாத்தியமில்லை என்பதைஎவரும் அறிவர்.

பிரதமரின் இவ்வுரை குறித்து இந்திய அமைதிப்படையின் முன்னாள் பிராந்திய தளபதி அசோக்மே...

# சோதிடக் கலையின் அகன்ற பரிமாணம்

## வீடு அமைப்பதிலும் எல்லைக் கோட்டை வகுத்துள்ளதா?

ஏ. எம். பிள்ளை

பண்டைக்காலத்தில்; சராசரி வர்க்கத்திலுள்ள மனிதர்கள் வீடுகட்டுவது என்பது முடியாது ஓரளவு தகுதி உள்ளவர்களேசுயமாக வீடுகட்டி, அதில் கிரகப்பிரவேசம் செய்ய முடியும். கட்டும் வீடுகளில் பெரும்பாலும் புறம்போக்கு நிலத்திலும், கோவிலுக்குச் சொந்தமான இடத்திலும் தான் அமைகிறது. இது பிரச்சினைக்குரிய மனை அமைப்பாகக் கருதப்படுகிறது.

நூற்றில் ஒருவர் மட்டுமே, சுயமாக முறைப்படி மனையடி சாஸ்திரப்படி, வீடுகட்டுகின்றனர். கட்டும் வீடு அவரவர் ஜெனன ஜாதகத்திற்கு ஏற்றபடி, இருத்தல் வேண்டும். யோகம் இல்லை எனில், அதில் முயற்சிப்பது சாத்தியமாகாது.

### மனைப் பொருத்தம்

லக்கினாதிபதியும் நான்காம் வீட்டுக்குடையவரும் பரிவர்த்தனையாகி இருந்தால் அந்த ஜாதகருக்கு வயது எட்டு ஆவதற்குள் அவருடைய பெற்றோர்கள் சுயமாக நல்லவீடு கட்டி அதில் கிரகப்பிரவேசம் செய்வார்கள்.

குருவும் மங்கள் என்ற செவ்வாயும் ஒருவருக்கொருவர் கேந்திர அமைப்பு பெற்று இருந்தால் அது குருமங்கள யோகம் ஆகும். அதன் காரணமாகவும்அந்தஜாதகருடைய இளமையிலேயே, அவருடைய பெற்றோர்களுக்கு நல்ல சதுர் கட்டான வீடு அமையும். தோட்டம், தோப்பு, துரவு, பழமரங்கள், வற்றாத நீர் நிலை போன்ற யாவும் குறைவற அமையும்.

நான்காம் இல்லத்ததிபதி 3,6,8,12, ல் இருந்தால் அந்த ஜாதகருக்குக் கல்வி இல்லை. புத்தி விவேகமும் இருக்காது. என்றாலும் இந்த 3,6.8,12 க்கு உடையவர்களை ஆட்சி உச்சம், கேத்திரம் திரிகோணத்தில் இருந்தால். அந்த ஜாதகர் அதிர்ஷ்டம்-வித்தை-விநயம்-வித்தி இவைகள் அதிகம் உடையவராக இருப்பார்-ராஜாதி ராஜராகவும் திகழ்வார்.

### வாகனப் பொருத்தம்

4 ஆம் பாவமும் 4 ஆவது பாவாதிபதியும் பலமுடையவராகி, சுபரால் பார்க்கப்பட்டால், அந்த ஜாதகருக்கு நல்ல வாகன பிராப்தி உண்டு.

4 ஆம் இல்லத்ததிபதியும் சந்திரனும் கூடிலக்கினத்தில் இருந்தால், அவருக்குக் குதிரைவாகன பிராப்தி உண்டு.

4 ஆம் இல்லத்ததிபதியும் சுக்கிரனுடன் கூடிலக்கினத்தில் இருந்தால், அந்த ஜாதகருக்கு யானை வாகனம் உண்டு.

வளர்பிறைச் சந்திரனும், சுக்கிரனும் பலமுடையவர்களாகி. கேந்திரதிரிகோணம் பெற்று இருந்தால் அவருக்கு பல்லக்கு அல்லது கார்போன்ற வாகனம் உண்டு.

10-11 க்கு உடையவர்கள் பரிவர்த்தனை பெற்று இருந்தால், அந்த ஜாதகர் வாகனமும் பூஷண வசதியும் பெற்று இருப்பார்.

4-10 க்குஉடையவர்கள்பலமுடையவர்களாகி, 11 ல் இருந்தாலும், அல்லது 11 ம் இல்லத்தைப் பார்த்தாலும், அந்த ஜாதகருக்குச் சர்வ பாக்கியமும் உண்டு.

4-9 க்கு உடையவர்கள் 11 ல் இருந்தாலும், அல்லது 4 ஆம் பாவத்தைப் பார்த்தாலும், அந்த ஜாதகருக்கு அநேக வாகனங்களும், சர்வ பாக்கியங்களும் ராஜயோகமும் உண்டாகும்.

4-ஆவது 9-ஆவது பாவாதிபதிகள் லக்கின சம்பந்தம் பெற்று குருவால் பார்க்கப்பட்டாலும், கூடினாலும், அந்த ஜாதகருக்கு ராஜ்ஜிய வசியமும், ஆபரணங்களும் கூடிவந்தால், அதில் நிரந்தரமான குறைபாடு இருக்கும்.

### அதிஸ்ரம்

புதையல் கிடைக்க சிலகிரக அமைப்பு இருக்கிறது. அது பூர்வபுண்ணிய பலம் உடையவர்களுக்கு மட்டுமே சித்திக்கும். 10 ஆம் அதிபதி 4 ல் இருந்தால், புதையல் கிடைக்கும். 4-2 ஆம் பாவம் சுபர் இல்லமாக இருந்து, அவ்விரு இல்லங்களின் அதிபதிகள், 8 ஆம் பாவத்தில் சுபருடன் கூடி இருந்தால் அவருக்கு புதையல் கிடைக்கும்.

4 இல் பாபக்கிரகங்கள் இருந்தால், அந்த ஜாதகருக்குச் சுகம் கிடையாது. 4 ல் நீச்சம் அல்லது அஸ்தங்கம் பெற்ற கிரகம் இருந்தால், அந்த ஜாதகர் இணற்றில் தவறி விழுவார்.

4 ஆம் அதிபதி 8 ல் இருந்தால் அவருக்கு வீடு இடையாது 4 ஆம் அதிபதி 12 ல் இருந்தால், அந்த ஜாதகர் அந்நிய தேசத்தில் அந்நிய வீட்டில் இருப்பார்.

4 ஆம் இல்லத்ததிபதி 6-8-12ல் இருந்தாலும் அல்லது 4ல் பலமான பாபக்கிரகம் இருந்தால், அந்த ஜாதகருடைய வீடு பீடை பிடித்த வீடாக இருக்கும்.

லக்கினாதிபதி 4 ஆம் இல்லத்ததிபதி பலமாக இருந்து 3 ஆம் இல்லத்தில் ஒரு சுபக்கிரகம் இருந்தால் அந்த ஜாதகருக்கு நான்கு பிரகாரமுடைய மாளிகை உண்டு.

(சு)

## சோதிட பலன்

சித்திக்கும்:

குருவும் - சுக்கிரனும் 9 ஆம் பாவாதிபதியும் கேந்திர திரிகோணத்தில் அல்லது 11ஆம் இல்லத்தில் இருந்தால், அந்த ஜாதகர் அநேக வாகனங்களுடையவராகி, மண்டலாதிபதியுமாவான்.

4ஆம் பாவம் சுபராசியாகி, 4 ஆம் பாவாதிபதி சபருடன் கூடி பலம் பெற்று இருந்தால், அந்த ஜாதகருக்கு அதிக பூமியும் தனமும் உண்டு. நெருப்பு கிரகங்களான சூரியன் - அங்காரகன் கூடின், பூமியோகம் எளிதில் கூடி வராது. அப்படி

# வன்னி மாவட்டத்தில் 10 ஆயிரம் பேர் தேர்தலில் வாக்களிக்க தடை

(வவுனியா)

போர்ச் சூழல் காரணமாக வவுனியா மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களிலும் வசித்து வரும் சுமார் 10 ஆயிரம் பேர், தேர்தலில் வாக்களிக்கும் வாய்ப்பினை இழந்திருப்பதாக தெரிய வந்துள்ளது.

வவுனியாவில் இருந்துஇடம் பெயர்ந்து அநுராதபுரம், புத்தளம், குருநாகல், மதவாச்சிப் பகுதிகளில் தங்கியிருந்த 30 ஆயிரம் பேர் தாம் வாக்களிப்பதற்கு அனுமதி கோரியிருந்தனர்.

எனினும், 20 ஆயிரத்து 400 பேருக்கே இதற்கான அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

ஏனைய 9 ஆயிரத்து 600 பேருடைய விண்ணப்பங்கள் பல்வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டுள்ளது.

அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாகவும், அது எடுத்துவரப்படாதவிடத்து வாக்களிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## அருட்கடலே அணைத்தென்னைக் காத்திடாயோ

இருளான மும்மலத்தா விடர்கள் பட்டு
இகமீதில் அலையாமல் இன்ன ருளால்
பெருவாழ்வு தந்தருளு பெருமா னேயிவ்
பிறப்பினுறு துயரமெலாம் பிறளச் செய்ய
வருவாயென் னருகில்மணி வண்ணர் என்றே
வழிநீரோ டுன்பாதம் வழுத்து கின்றேன்
அருளாளா எம்வண்ணை வெங்க டேசா
அருட்கடலே அணைத்தென்னைக் காத்தி
டாயோ?

(வண்ணை வெங்கடேச பெருமாள் கோயில் உற்சவத்தை முன்னிட்டு பிரசுரமாகும் கவிதை)

நாயண்மார்கட்டு இராசையா குகதாசன்

பொதுத் தேர்தலுக்கு முன்னதாக ஆனையிறவை மீண்டும் படையினர் கைப்பற்றி விடுவர். அதன்பின் தரைப்பாதை திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதமர் அண்மையில் கூறியுள்ளார். இது ஒரு கற்பனைக் கதையாக, தேர்தல் மேடை நாடகத்தின் வீராப்பு வசனமாக அமையலாமே யொழிய நடைமுறைச் சாத்தியமில்லை என்பதைஎவரும் அறிவர்.

பிரதமரின் இவ்வுரை குறித்து இந்திய அமைதிப்படையின் முன்னாள் பிராந்திய தளபதி அசோக்மேத்தா தனது இராணுவ அறிவையும். விடுதலைப் புலிகளின் பலத்தை களத்தில் கண்ட பட்டறிவையும் கொண்டு பிரதமரின் கூற்று பகற்கனவு எனக்கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கனதியை சரியான முறையில் மதிப்பீடு செய்தவர்களில் இந்தியா அமைதிப் படைத் தளபதிகள் முதன்மையானவர்கள். பிரதமரின் கூற்றை பகற்கனவெனக் கூறிய தளபதி மேத்தாவின் கருத்தும் அம் மதிப்பீட்டின்வெளிப்பாடு என்பதை இலங்கைஅரசும் பிரதமரும் உணர்ந்து கொண்டால் நடைமுறைக்கு ஒவ்வாத வீறாப்பு வசனங்களை தவிர்த்துக் கொள்ளலாம். அது எதிர்காலத்திலாவது இனப்பிரச்சினைக்கு ஆரோக்கியமான தீர்வை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவும்.

---

நான்காம் இல்லத்ததிபதி 3,6,8,12, ல் இருந்தால் அந்த ஜாதகருக்குக் கல்வி இல்லை. புத்தி விவேகமும் இருக்காது. என்றாலும் இந்த 3,6.8,12 க்கு உடையவர்களை ஆட்சி உச்சம், கேத்திரம் திரிகோணத்தில் இருந்தால். அந்த ஜாதகர் அதிர்ஷ்டம்- வித்தை-விநயம்-வித்தி இவைகள் அதிகம் உடையவராக இருப்பார்-ராஜாதி ராஜராகவும் திகழ்வார்.

## வாகனப் பொருத்தம்

4 ஆம் பாவமும் 4 ஆவது பாவாதிபதியும் பலமுடையவராகி, சுபரால் பார்க்கப்பட்டால், அந்த ஜாதகருக்கு நல்ல வாகன பிராப்தி உண்டு.

4 ஆம் இல்லத்ததிபதியும்

# சோதிட பலன்

சித்திக்கும்:

குருவும் - சுக்கிரனும் 9 ஆம் பாவாதிபதியும் கேந்திர திரிகோணத்தில் அல்லது 11ஆம் இல்லத்தில் இருந்தால், அந்த ஜாதகர் அநேக வாகனங்களுடையவராகி, மண்டலாதிபதியுமாவான்.

4ஆம் பாவம் சுபராசியாகி, 4 ஆம் பாவாதிபதி சபருடன் கூடி பலம் பெற்று இருந்தால், அந்த ஜாதகருக்கு அதிக பூமியும் தனமும் உண்டு. நெருப்பு கிரகங்களான சூரியன் - அங்காரகன் கூடின், பூமியோகம் எளிதில் கூடி வராது. அப்படி

---

# அருட்கடலே அணைத்தென்னைக் காத்திடாயோ

இருளான மும்மலத்தா விடர்கள் பட்டு
இகமீதில் அலையாமல் இன்ன ருளால்
பெருவாழ்வு தந்தருளு பெருமா னேயிவ்
பிறப்பினுறு துயரமெலாம் பிறளச் செய்ய
வருவாயெவ னருகில்மணி வண்ணர் என்றே
வழிநீரோ டுன்பாதம் வழுத்து கின்றேன்
அருளாளா எம்வண்ணை வெங்க டேசா
அருட்கடலே அணைத்தென்னைக் காத்தி
டாயோ?

(வண்ணை வெங்கடேச பெருமாள் கோயில் உற்சவத்தை முன்னிட்டு பிரசுரமாகும் கவிதை)

நாயண்மார்கட்டு இராசையா குகதாசன்

---

## பரமபிதா காட்டிய பாதை



# ஆணவத்தை அகற்றி அமைதியான வாழ்வு காணுங்கள்

நாம் வாழும் உலகிலே எங்குபார்த்தாலும் தினசரிப் பத்திரிகைகள் கூறுவது போன்று நாளாந்தம் கொலை குண்டுவெடிப்புக்கள் அழிவுகள், நாசகாரச் செயல்கள, கற்பழிப்புக்கள், தாக்குதல்கள் போர் முழக்கங்கள் முதலியன மலிந்து காணப்படுகின்றன. இதனால் எவ்வளவோ மக்களின் இடம் பெயர்வுகள், கண்ணீரும் கம்பலையுமான சோகக் காட்சிகள், நிம்மதியற்று நிலை குலைந்து நடைப்பிணங்களாகிநிற்கும்மானுடஜென்மங்களின் அவலங்கள், எல்லாம் சர்வசாதாரணமாகி விட்ட நிலை காணப்படுகின்றது. இத்தனை அழிவுகளிற்கு எல்லாம் மூல காரணம் என்ன? அடிப்படை நோக்கம் என்ன?

நாம் நம்மிடம் யார் பெரியவன்? என்ற கேள்வியை எழுப்புகின்றோம்: இயேசுவின் சீடர்களும் வழியால் வரும் போது தமிகளுக்குள் ''யார் பெரியவன்?'' என்பதைப் பற்றி வாதாடிக் கொண்டு வந்தார்கள்; இயேசு அமர்ந்து அவர்களை அழைத்து, ''ஒருவன் முதல்வனாய் இருக்க விரும்பினால் அவன் அனைவரிலும் கடையனாய் இருக்கட்டும் அனைவருக்கும் பணியாளன் ஆகட்டும்'' என்றார் தன்னை மக்களுக்குச் சேவை செய்வதற்காகச் செலவழிக்கிறானோ அவர்களின் பணியாளனாக தன்னை தாழ்த்திக் கொள்கிறானோ அவனே தலைவனாகத் தகுதியுடையவன். ஏனெனில் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுபவன் உயர்த்தப்படுவான் தன்னை தானே உயர்த்திக் கொள்பவன் தாழ்த்தப்படுவான்.

எவ்வளவுக்கு ஆழமாக அத்திவாரமிடப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு உயரமாக மாடிவீடுகளைக் கட்டலாம் எவ்வளவு ஆழமாக தாழ்வாக குளங்கள். நீர்நிலைகள் இருக்கின்றனவோ அவ்வளவுக் கதிகமாக நீர் தேங்கிக்கொள்ளும் வெள்ளம் தாழ்வான இடங்களை நோக்கியே செல்லும் எனவே எவ்வளவுக்கு மனிதனுக்கு உடை அவசியமோ

**அ. பத்மதாசன்**


அதைவிட அவனுக்கு தாழ்ச்சி அவசியமாகும். ஏனெனில் ''தாழ்நிலை நின்ற தம் அடிமையைக் கடைக்கண்நோக்கினார்- நெஞ்சிலே செருக்குற்றவர்களைச் சிதறடித்தார், தாழ்ந்தோரை உயர்த்தினார்'' என்று தேவதாய் இறைவனை புகழ்ந்து பாடியுள்ளார்,

இயேசுவும் நெருங்கிவரும் தன்னுடைய பாடுகள் மரணத்தை அறிவிப்பதன் மூலம் சீடர்களுக்குத்தாழ்ச்சிஎன்னும் பாடத்தை கற்பிக்கிறார் தன்னுடைய பிதாவின் சித்தத்தை ஏற்றுதாழ்ச்சியுடன்கீழ்ப்படிந்துசிலுவைமரணத்தை ஏற்று நம்மை மீட்டார். எனவே நாமும் எங்கள் அதிகாரம். ஆணவம் என்ற நிலைகளில் இருந்து இறங்கி எம்முடைய உண்மையான நிலைகளைத் தாழ்ச்சியுடன் ஏற்று எம்முடைய அன்றாட கடமைகளைக் கீழ்ப்படிதலுடன் நிறைவேற்றி மீட்படைவோமாக. எம்குற்றங்களை ஏற்று மனமாற்றமடைவோமாக சண்டை சச்சரவுகளை விலக்கி வாழ்வோமாக.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

## 27ஆவது ஒலிம்பிக் போட்டி



### கரப்பந்தாட்டப்போட்டியில் கியூபாவுக்குத் தங்கப்பதக்கம்

(அவுஸ்திரேலியா)

சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் 15 ஆவது நாளான நேற்று அதிகளவு நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. பெண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டியில் கியூபா, தங்கப் பதக்கத்தினையும், ரஷ்யா, பிறேசில் என்பன வெள்ளி, வெண்கலப்பதக்கங்களைப் பெற்றுக்கொண்டன.

★ ★ ★ ★ ★ ★

குத்துச் சண்டையின் பல பிரிவுகளுக்கான முக்கிய இறுதிப் போட்டிகளும் நேற்று நடைபெற்றன. 48 கிலோ எடைப் பிரிவினை பிரான்சும், 67கிலோஎடைப் பிரிவில் ரஷ்யாவும், 60, 75, 91கிலோ எடைப் பிரிவுகளில் கியூபாவும் தங்கப் பதக்கத்தினை பெற்றுக் கொண்டன.

★ ★ ★ ★ ★ ★

இதேவேளை கரப்பந்தாட்டம், சைக்கிளோட்டம், நீச்சல், கூடைப்பந்தாட்டம் மற்றும் ஓட்டப்பந்தயம் எனப் பல்வேறு நிகழ்ச்சிகளும் நேற்று இடம்பெற்றுள்ளமைஇங்குகுறிப்பிடத்தக்கது.

### புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் இடம் பெற்றுவரும் ஓயாத அலைகள் -4நடவடிக்கையின்போது

★ 2 ஆம் லெப்டினண்ட் கிளியன்
(கந்தசாமி தங்கேஸ்வரன்)
யாழ்ப்பாணம்

என்ற போராளி தமதுதரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-2)

### ஊரடங்கு தளர்த்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில்இதுவரை காலமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தஊரடங்குச் சட்டம் மேலும் தளர்த்தப்பட்டுள்ளது.

இரவு 7மணி முதல் அதிகாலை5மணிவரை அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் இன்று முதல் இரவு 8 மணி முதல் அதிகாலை 5மணி வரை அமுல்படுத்தப்படும். (ந)

**தமிழர்கள்...**

வியே இரட்ணசிறி தேரர் தொடர்ந்து பேசுகையில் இராவணன் காலம் முதல் இலங்கை சிங்களவருக்கே உரியது. நாட்டைபிரிக்கவோ பறிக்கவோ நாம் ஒரு போதும் விடமாட்டோம். தமிழர்கள் தமக்கு நாடு தேவையாயின் இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டுடன் யுத்தம் செய்து ஒருபகுதியைக் கைப்பற்றி அங்கு வாழலாம் எனவும் தெரிவித்தார். (ந)

**வாக்களிப்பு...**

அவர் மேலும் தெரிவிக்கையில், வாக்களிப்புநடைபெறும் போது வாக்களிப்பு நிலையங்களுக்கு உள்ளேயும், வெளியேயும் எதுவித அசம்பாவிதமும் இடம்பெறாதிருக்க விஷேட இராணுவ, பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதெனத் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாண மக்களின்வாழ்க்கைசுமுகமான நிலைக்குத் திரும்பியுள்ளதென்றும், போக்குவரத்து, வங்கி, சுகாதார சேவைகள் வழமை போல் நடைபெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந - 4)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
விஜய் சிம்ரான்

ஸ்ரீ செல்வா

# பத்துப் பேர் கொண்ட கோஷ்டி எனது காரை நோக்கிச் சுட்டனர்

## ஹிஸ்புல்லா முறைப்பாடு

(மட்டக்களப்பு)

ஓட்டமாவடியில் தேர்தல் பிரச்சாரங்களை நடத்தி விட்டு கிரானில் உள்ள குப்புறுமூலை இராணுவ முகாமை தாண்டி மூறக் கொட்டாஞ் சேனையால் வந்து கொண்டிருந்த போது இனம் தெரியாதோர் எனது காரை நோக்கி சுட்டனர் இவ்வாறு அமைச்சர் ஹிஸ்புல்லா தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

நேற்றுமாலை 5.30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

குண்டுத்தாக்குதல்சம்பவத்தின் போது லைற்சாஜர் குண்டுஒன்றின் மூலம் லைற் போஸ்ரை விழுத்தினார்கள் அதன் பின்னர் பொலிஸ் வாகனங்களுக்கிடையில் தடைப்பட்டு நின்ற எனது காரை இலக்காக வைத்து சுமார் பத்து பேர் அடங்கிய கோஷ்டி ஒன்று கண்டபடி சுட்டுக் கொண்டு எனது காரை நோக்கி வந்ததை நான் கண்ணாடியினூடாக அவதானித்துக்கொண்டேன். எனது கார் குண்டு துளைக்காத காராக இருந்தமையினால் குண்டுகள் எதுவும் காருக்குள்பாயவில்லை.

எனது காருக்கு முன்னாலும் பின்னாலும் நின்ற பொலிஸ்வாகனம் மீது துப்பாக்கி பிரயோகம் செய்யாமல் என்மீதே இலக்கு வைத்து சுடப்பட்டதை நான் அவதானித்தேன் என்றும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (வ-60-108)

**யுத்தகளமாக...**

நடையாகவும், சைக்கிள்களிலும், வண்டில்களிலும், லொறிகளிலும் புறப்பட்டுச் சென்றவண்ணம் உள்ளனர்.

கொடிகாமம் சந்தை வெறிச்சோடிக் காணப்பட்டதாகவும், இரண்டொரு கடைகள் மட்டுமே அங்கு திறந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமத்திலுள்ள வர்த்தகர்களின் பொருட்களை பாதுகாப்பான இடங்களுக்கு ஏற்றிச்செல்வதையும் அவதானிக்கமுடிந்தது.

கொடிகாமம் பகுதியில் இராணுவ நடமாட்டமே அதிகரித்திருக்கக் காணப்பட்டது. மிருசுவில் பகுதியில் பதற்றம் நிலவியபோதும், அங்கு குறிப்பிடத்தக்க மக்கள் இன்னமும் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிருசுவில் தபால் கந்தோர் பகுதியில் ஷெல்வந்து வீழ்ந்த வெடித்ததில் ஒரு இராணுவம் பலியானதாகவும் அப்பகுதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் பெருமளவு இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிருசுவிலில்உள்ள படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்தில் பொதுமக்கள் இலர் தஞ்சமடைந் திருப்பதாகவும் அவர்கள் இன்று வெளியேறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கொடி...

## ஐ.தே.க. ஆதரவாளர் மீது உழவு இயந்திரத்தில் வந்தோர் தாக்கு

(கொழும்பு)

நிக்கவரட்டியா பகுதியில், ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மீது உழவு இயந்திரத்தில் வந்தவர்கள் துப்பாக்கியால் சுட்டதில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களில் இருவரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சியின் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ளச் சென்ற ஆதரவாளர்கள் மீதே மேற்படி தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தாக்குதல்காரர்கள் ரி-56 ரக துப்பாக்கிகளைப் பயன்படுத்தியதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களே தம்மீது தாக்குதல் நடத்தியதாகவும் ஐக்கிய தேசியக்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர். (உ)

## 628வாக்காளர் அட்டைகள் அபேஸ்

எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு அம்பாறை மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 628 வாக்காளர் அட்டைகள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் செயலகத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்கள் மீதும் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை காணாமல் போன வாக்காளர் அட்டைகள் அனைத்தும் திருக்கோயில் பகுதிக்கு அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

**சிறுப்பிட்டி...**

வும், வயிற்றில் பலத்த காயத்துடனும் கை, கால்களில் சிறு காயங்களுடனும் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ)

**வல்லைப்...**

புறமாக மண்ணுக்கு அணையாகவைக்கப்பட்டிருந்த இரும்புக் கேடர் இழுத்துச்செல்லப்பட்டதால் தற்பொழுது பெய்துவரும் பெருமழைக்கு அணையில் இருந்த மண் அடித்துச் செல்லப்படுவதாகவும். இதனால் பாலம் உடைந்துவிடும் ஆபத்தில் இருப்பதாகவும் பயணிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்

வல்லைப்பாலம் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு...

**குண்டுத்.**

மதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் கோர கல்லிமடு என்ற இடத்தில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குண்டு வீச்சுச் சம்பவத்தை யடுத்து அமைச்சர் ஹிஸ்புல்லா படையினரால் பாதுகாப்பாக அழைத்துச்செல்லப்பட்டு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தையடுத்து காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகியபிரதேசங்களில்பரபரப்பும் பதற்றமும் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

(சுன்னாகம்)

விஜய் சிம்ரான்
மணிவண்ணன்
நடித்த

## துள்ளாத மனமும் துள்ளும்

(ரீல்ஸ்)
தினசரி .11-2 30(பு.நே)
(இ-841

ஸ்ரீ செல்வா
[யாழ்ப்பாணம்]

அர்ஜுன் - மீனா
நடித்த

## ரிதம்

புதிய வெளியீடு
10.30-2.00 (ப.நே)

(ந - 4)

கப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கொடிகாமம் இராணுவ முகாமில் இருந்து கிளாலிப்பகுதியை நோக்கி பலத்த எறிகணைத் தாக்குதலை இராணுவத்தினர் மேற்கொண்டுவருவதனால் தென்மராட்சிப்பகுதி எங்கும் ஒரே குண்டுச்சத்தமாக இருப்பதாகவும் எமது செய்தியாளர் அறிவிக்கிறார்.

(வ

இருப்பதாகவும் பயணிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்

வல்லைப்பாலம் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் திருத்த வேலைகள் ஆமை வேகத்திலேயே நடைபெற்றுவருகிறது

இதேவேளை கடந்த புதன் கிழமை வல்லைப் பாலத்தில் தடம்புரண்டு கடலில் வீழ்ந்த இராணுவ ''ட்ரக்'' வண்டி நேற்று மீட்கப்பட்டுவிட்டதாகவும் அறியமுடிகிறது. (வ)

ஆகியபிரதேசங்களில்பரபரப்பும் பதற்றமும் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(வ)


## மோறாப் படகு...

றும் இராணுவப்பேச்சாளர சரத் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

இதே வேளை புலிகளின் படகு ஒன்றை கடற்படையினர் தாக்கி மூழ்கடித்ததாகவும் சரத் கருணாரட்ண மேலும் தெரிவித்தார். (வ)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்

இளைஞர்களே! யுவதிகளே !
படித்து முடித்து பட்டம் பெற்று
வேலையற்று வீதியில் அலைவது எதுவரை?...
உங்கள் கனவுகளை நனவாக்க,
உங்கள் வாக்குகள்
வீணைச் சின்னத்திற்கே!



# (ஈ. பி. டி. பி)

(இ/736)

1999ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் கல்வி அபிவிருத்திக்காக 47இலட்சம் ரூபா ஈ. பி. டி. பி. பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அச் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 01ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.